பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 183 வைகாசி 16ஆம் நாள் வியாழக்கிழமை 30 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Leading to MBA
BBA
(Bachelor of Business Administration)
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

### அவசரகாலச்சட்டம் நடைமுறையில் உள்ள போதும்

# கிளிநொச்சியில் நேற்று வாள்வெட்டுக்குழு அடாவடி

- கர்ப்பிணிப் பெண் உட்பட 9 பேர் படுகாயம்
- வீடும் உந்துருளியும் தீயிட்டு எரிப்பு
- மேலும் பல உடைமைகள் சேதம்
- இரு குடும்பங்கள் மீது சரமாரி வாள்வெட்டு!



கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி, செல்வாநகர் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலில் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர். நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளபோது இத்தகைய சம்பவம் இடம்பெற்றுள்ளமை அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. 21



## உலகக்கிண்ணம் இன்று ஆரம்பம்!

லண்டன், மே 30

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் 12ஆவது உலகக்கிண்ணத் தொடர் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. இங்கிலாந்து இந்த வருட உலகக்கிண்ணத் தொடரை நடத்துகிறது.

இதன்படி இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடர் ஜூலை மாதம் 14ஆம் திகதி இறுதியாட்டத்துடன் முடிவுக்கு வரும். இன்றைய முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

லண்டனில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ம)

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

## ஜூன் மாதம் 5ஆம் திகதி முதல் வேலைநிறுத்தத்துக்குத் திட்டம்

கொழும்பு, மே 30

ஜூன் ஐந்தாம் திகதி நள்ளிரவு முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. 21

## ஸஹ்றானின் தாக்குதல் குறித்து எந்தத் தகவலும் தெரியாது!

### புலனாய்வுத்துறைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

ஸஹ்ரனின் தாக்குதல் குறித்தோ அல்லது அது தொடர்பாக வந்த முன்னெச்சரிக்கை குறித்தோ தமக்கு எதுவும் தெரியாதென தேசிய புலனாய்வுத் துறைத் 21



## உடைத்து அகற்றப்பட்ட தௌஹீத் ஜமாத் பள்ளி

கொழும்பு. மே 30

கெக்கிராவ, மடாட்டுகமவில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் பள்ளிவாசல் நேற்று அந்தப் பகுதி முஸ்லிம் மக்களினால் உடைத்து அகற்றப்பட்டது.

ஊர் பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் மக்கள் ஒன்றுகூடி எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் குறித்த பள்ளிவாசல் உடைக்கப்பட்டது.

'நூலகம் ஒன்றை அமைக்க ஒதுக்கப்பட்ட காணியில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பினர் வெளிநாட்டு நிதியுதவியுடன் குறித்த பள்ளிவாசலை அமைத்திருந்திருந்தனர். இந்தநிலையில். 21

## மேலதிகமாக 70 ஆயிரம் பேருக்கு வடமாகாணத்தில் சமுர்த்தி உதவி

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு மாகாணத்தின் நீண்டகால கோரிக்கையின் பெயரில் 5 மாவட்டத்துக்குமாக 70 ஆயிரம் பேருக்கு ஜூன் மாதம் சமுர்த்தி உதவிகள் மேலதிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் வழங்கப்படும் சமுர்த்தி முத்திரையின் அளவானது ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மிகவும் வறு 21

## ஞானசாரரின் குற்றச்சாட்டை நிராகரித்தது துருக்கி

கொழும்பு, மே 30

இலங்கையில் பிழையான கருத்துக்களை ஊக்குவிக்கவும், பதற்றத்தைத் தூண்டுவதற்கும், ஊடகங்களை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்காகவும் துருக்கியில் சிறப்பு நிதியமொன்று உரு 21

### குருநாகல் மருத்துவர் விவகாரம்

## சுகாதார அமைச்சின் குழுவின் முன் சாட்சியமளிக்க ஊழியர்கள் மறுப்பு

கொழும்பு, மே 30

குருநாகல் மருத்துவர் ஷாபி மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க சுகாதார அமைச்சு நியமித்த 6 பேர் கொண்ட விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்க மருத்துவமனை ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

குறித்த குழுவின் மீது நம்பிக் 21



## நொச்சியாகம விபத்தில் இளைஞன் துயரச் சாவு

### நால்வர் படுகாயம்

வவுனியா, மே 30

வவுனியாவில் இருந்து வானூர்தி நிலையத்துக்கு வாகனத்தில் சென்று திரும்பிய நிலையில் நொச்சியாகம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்தார். நால்வர் படுகாயம 21

## தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் இயல்புக்குத் திரும்புவதற்கு விரைந்து நடவடிக்கை

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு. மே 30

மூளைச்சலவை செய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களைக் கண்டறிந்து அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்தார் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சாந்த கோட்டேகொட.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற தெரி 21

## ரணில் – சம்பந்தன் அலரிமாளிகையில் இரகசியச் சந்திப்பு

### தகவல் வெளியிட மறுப்பு

கொழும்பு. மே 30

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று அலரிமாளிகையில் இரகசிய சந்திப்பு நடைபெற்றுள்ளது.

சந்திப்பு இடம்பெற்றதை இரு தரப்பின் ஊடகப் பிரிவுகளும் உறுதிப்படுத்தியுள்ளபோதிலும் 21

# கண்ணீர் அஞ்சலி




எமது சக ஊழியர் சி.வளவன் அவர்களின்
பாசமிகு தாயார்
**திருமதி சிதம்பரநாதன் கோமளம்**
அவர்கள்
கடந்த 26.05.2019 ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை**
**டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு – பருத்தித்துறை**

## மரண அறிவித்தல்

# சந்திரசேகரம் சிவப்பிரகாசம்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12.07.1954 | 29.05.2019 |

அனுராதபுரத்தை பிறப்பிடமாகவும் பாலிநகர் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சிவப்பிரகாசம் நேற்று (29.05.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் சந்திரசேகரம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சின்னக்குட்டி - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சதாசிவம், சிவபாலன், பரமேஸ்வரி, புஸ்பராணி, தங்கவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானசவுந்தரி, ருக்மணி, காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஜெயந்திமாலா மற்றும் ஜெயந்தன் (ஆசிரியர் - யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்), சுதாகினி (கனடா), சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவராஜா, சித்திராம்பிகை, ரதிஸ், விஜயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷா, விதுஷா, பானுஷா, தாகிஷா, பாதினியன், அபிசன், அபினேஸ், சுலோஜன், சுயானி, சுஜே, வைஸ்ணவி, சாதுரிஜன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலிநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாலிநகர்,**
**வவுனிக்குளம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



# ஐயாத்துரை சிங்கராஜா

**(ஓய்வுபெற்ற தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர்)**

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிங்கராஜா நேற்று (29.05.2019) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான ஐயாத்துரை மாரிமுத்து தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்ற நேசமலரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற நிரூபன் மற்றும் நிசாந்தன் (மேலதிக மாவட்ட பதிவாளர், உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் ஐங்கரியின் (பிரதேசசபை, உடுவில்) பாசமிகு மாமனாரும் அஸ்விதா குட்டிச்செல்லத்தின் பேரனும் காலஞ்சென்ற தங்கமலர் மற்றும் யோகராஜா (ராஜாஹாட்வெயர், கோண்டாவில்), மல்லிகாமலர், தர்மராஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் மங்கையற்கரசி ஜெயராஜா, ஜெயந்தி காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் பாலசிங்கம் (இத்தாலி) காலஞ்சென்ற இராசமலர் மற்றும் யோகமலர், காலஞ்சென்ற அழகராஜா மற்றும் புஸ்பமாலா, செல்வராஜா, இரஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சாந்தகுலசிங்கம் சகுந்தலா ஆகியோரின் சம்மந்தியும் பிரவிந்தன் (Eng), கீர்த்திகன் (நீர்ப்பாசனத்திணைக்களம்), செந்துமி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பெரியப்பாவும் ஜெயானந்தனின் (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) மாமனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0772518509**

# மரண அறிவித்தல்

# திருமதி செல்லையா பூவதி

**(இடைப்பிட்டி, காரைநகர்)**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர், இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா பூவதி 29.05.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - அபிராமி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு செல்லையா (அப்போதிக்கரி - RMP) இன் அன்பு மனைவியும் சச்சிதானந்தன் (ஓய்வு நிலை பராமரிப்பு முகாமையாளர், ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ்), காலஞ்சென்ற ரதிவதனி (ஆசிரியை), தயானந்தா (ஓய்வு நிலை பிரதேச செயலாளர்), அருளானந்தன் (சுங்க அத்தியட்சகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரகலா, ஜெகநாதன் (ஓய்வு நிலை ஆசிரியர்), விஜயலலிதா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் அஜந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கலாநிதி வாகீசன் (லண்டன்), மயூரி, மயூரன் (கனடா), கோபிகாந்தன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), சாருகா (விரிவுரையாளர் - திறந்த பல்கலைக்கழகம், நாவல), சாம்பவி (கிராம அலுவலர், பிரதேச செயலகம், நல்லூர்), சுஜீவன் (உதவி மருந்து வழங்குனர்), அருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிநயன், அபிநயா, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இடைப்பிட்டி,**
**காரைநகர்.**

(CS 25693)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வேலை வாய்ப்பு

சுழிபுரம், வசாவிளான், நெல்லியடி ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், சட்டறிங் வேலை செய்பவர் உடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**0768264859, 0777 120 945**

## தவறிவிட்டது

கந்தரோடையைச் சேர்ந்த பொன்னுத்துரை சந்திர குமார் என்பவரின் 2ATM காட், 2 தேசிய அடையாள அட்டைகள், பணம் 4500/= உட்பட போ்ஸ் போதன வைத்தியசாலைக்கு முன்பாக தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவா்கள் தயவுசெய்து பின்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடா்புகொள்ளவும்.

**075 850 9039**

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு வேலை செய்வதற்கு நடுத்தர வயதுடைய பணிப்பெண் தேவை

**தொடர்புகளுக்கு**
**077 607 9619**

## வேலைவாய்ப்பு

சுண்டுக்குளி பகுதியில் இயங்கிவரும் பிரசித்தி பெற்ற விநியோக நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- களஞ்சிய பொறுப்பாளர் (பெண்கள் மட்டும்)
- கணக்கு பதிவாளர் (பெண்கள் மட்டும்)

தங்கள் விண்ணப்பங்களை Viber /E -mail முவரிக்கு அனுப்பவும்.

**Viber : 077 178 8248**
**E-mail : bestfoodsjaffna@gmail.com**

## ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்

உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி

**IELTS**
- Unique Test Tips
- Latest course Materials

**IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

Dip.in English மற்றும் Spoken English கற்கைநெறிகளுக்கு யூன் மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun<br>10.00a.m | Mon,Wed,Fri<br>10.00 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

## DMI COMPUTER EDUCATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி சயவீஸ் ஹோல் அருகாமை<br>**யாழ்ப்பாணம்**<br>Tel.: 021-222 4403 | M.M.V.வீதி (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக)<br>**நெல்லியடி**<br>Tel.: 021-226 2470 | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில்<br>**சாவகச்சேரி**<br>Tel.: 021-227 0775 | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில்<br>**சுன்னாகம்**<br>Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக)<br>**கிளிநொச்சி**<br>Tel.: 021-228 5655 | சீரணிச்சந்தி<br>**சண்டிலிப்பாய்**<br>Tel.: 021-225 5556 |

## யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை
### பழைய மாணவர் சங்கத்தெரிவு - 2019

காலம் : 05.06.2019 புதன்கிழமை
நேரம் : மாலை 3.00 மணி
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

பழைய மாணவர்கள், பழைய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர்,**
**பழைய மாணவர்கள்.**

(CS 25679)(14,17)



# சேவை நலன் பாராட்டு




## செல்வி விமலாதேவி விசுவனாதன்
(அதிபர்)

### யா/ வலந்தலை வடக்கு, அ.மி.த.க வித்தியாலயம் காரைநகர்

இன்று தனது **அறுபதாவது அகவையில்** ஓய்வுபெறும் எமது வித்தியாலய **அதிபர் செல்வி விமலாதேவி விசுவனாதன்** அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது ஓய்வு காலம் சிறக்கவும் மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரம்:**

| | | |
|---|---|---|
| 1993 | - 1995 | - காரைநகர் மகா வித்தியாலயம் |
| 1995 | - 1996 | - காரைநகர் இந்துக் கல்லூரி |
| 1997 | - 1998 | - பலாலி ஆசிரிய கலாசாலை |
| 1999 | - 2011 (Sept) | - காரைநகர் இந்துக் கல்லூரி |
| 2011 (Sept) | - 2011 (Dec) | - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் |
| 2012 | - 2019 | - அதிபர், வலந்தலை வடக்கு, அ.மி.த.க. வித்தியாலயம். |

**வாழ்த்துவோர்:** **வித்தியாலயச் சமூகம்,**
**யா/ வலந்தலை வடக்கு, அ.மி.த.க. வித்தியாலயம்**
**சடையாளி, காரைநகர்.**

# 2 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

Born to Serve
23 . 08 . 1941



Called to rest
30 . 05 . 2017

## அமரர் அரியஜோதி முருகேசபிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதேச மருந்தாளர்)



அவனியிலே அரிய ஜோதியாய் ஜொலித்து
எம் மனங்களில் அணையா ஜோதியாய்
ஒளிர்ந்து கொண்டிருக்கும் – எம்
அன்புத் தெய்வம் அம்மா!
ஈராண்டென்ன ஏழேழு ஜென்மத்துக்கும்
என்றென்றும் எக்கணமும் நின் நினைவே.

எம் கண்களிலே உன் கம்பீரத் தோற்றம்
காதிலே உன் அறிவுரைகள் – எம்
நெஞ்சிலே உன் நிழல்படங்கள் – எம்
நினைவிலே உன் கவலை
எப்படி மறப்போம் உன் பண்பான வாழ்வதனை?

பிறப்பும் உறுதி இறப்பும் உறுதி
என்பதனை மனத்திருத்தி
சிறு ஆறுதல்தான் அடைந்தாலும்
தாங்கமுடியவில்லையே நின் பிரிவை!!

இன்புறவே நாம் வாழ இனிய பல செய்தீரே!
எழிலாக எமை வளர்த்து ஏற்றமுற வைத்து
ஏணியாய் இருந்தெம்மை ஏற்றிவைத்து மகிழ்ந்தீரே!

அன்புத் துணைவனும் ஆருயிர் மக்களும்
உற்றார் உறவினர்களும் எப்படித்தான்
– தாங்கிடுவர் நின் பிரிவை
கர்த்தரின் அரவணைப்பில் – நீ
நிம்மதியாய் உறங்கம்மா!!!

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

ஆறாத்துயரில் தவிக்கும்
**கணவர், பிள்ளைகள், குடும்ப உறவுகள்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 30.04.2019 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் கனகரத்தினம் மங்கையற்கரசி



தோற்றம் 10.11.1951 — மறைவு 30.04.2019


அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(CS 25691/04.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி ஓங்காரவடிவேல்

மலர்வு 14.01.1949
உதிர்வு 10.06.2018

உண்மைநெறி பாசமது உயர்வாய் ஓங்க
உள்ளத்தால் எமையெலாம் இணைத்து நின்று
வண்மையுடன் நின்றபெரு உறவு இன்றி
வாடுகிறோம் நாமிங்கே கதி இழந்து
ஆண்டொன்று போனாலும் ஐயா உந்தன்
அன்பான நினைவிங்கே ஆடு தையா
பூண்டபெரு இறையடியில் நீர் இருக்க
பூரிப்பாய் வேண்டுகிறோம் சாந்தி சாந்தி

23/27, குளக்கட்டு வீதி, வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

குடும்பத்தினர்

# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## கோப்பாய் உப அலுவலக சந்தைக்கடைத்தொகுதி சலுகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2019

எமது கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட பத்து (10) சந்தைக்கடைத் தொகுதிகளினை 2019 ஆம் ஆண்டுக்கு (01.07.2019 - 31.12.2019) சலுகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்திப்பொருள்கள் சார்ந்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன. இக்கடைத்தொகுதியில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். குத்தகைக் கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்படும். விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 100.00 ஆகும். விண்ணப்பப்படிவங்கள், நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| **கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி** | : **03.06.2019 - 17.06.2019 நண்பகல் 12.00 மணிவரை** |
| **கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** | : **18.06.2019 பி.ப. 02.00 மணிவரை** |
| **கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி** | : **18.06.2019 பி.ப. 02.00 மணி** |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "கோப்பாய் உப அலுவலக சந்தைக்கடைத்தொகுதி சலுகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2019" என எழுதி மூலப்பிரதியை **"தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் எதிர்வரும் 18.06.2019 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியா கவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தியாகராஜா நிரோஷ்,**
**தவிசாளர்,**
**வலி. கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**

# பெறுகை அறிவித்தல் - 2019
## பிரதேச செயலகம், தென்மராட்சி - சாவகச்சேரி

01. தலைவர். பிராந்திய பெறுகைக்குழு.பிரதேச செயலகம். தென்மராட்சி - சாவகச்சேரி அவர்களினால். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

02. ஒப்பந்தகாரர்களில் பின்வரும் தகவுடையோரும் தகைமைபெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.

I கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD/CIDA) பதிவுள்ளவராகவும் கீழே அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டும் இருத்தல் வேண்டும்.

II இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலைகளை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

III ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்திறனுக்கு (கறுப்பு பட்டியல்) உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்ககூடாது.

IV பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016 (1) இற்கமைவாக இது தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக இருந்தாலும் வடக்குமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

03. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிதிக்கிளையின் களஞ்சிய பிரிவில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல : 021-2271012 / 021-2271011)

04. பெறுகை ஆவணங்களை கண்டி வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 29.05.2019 தொடக்கம் 13.06.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 09.00மணி முதல் 14.00மணி வரையான நேரத்தில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 1000/= இணை (NBT,VAT தவிர்ந்த) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி பத்திரங்களை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில்"TN/DS/FIN/PRO/RRDP/ROADS-IV/....../2019." என கூறுவிலை இலக்கம் குறிப்பிட்டு பெறுகை பெட்டியினுள் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 13.06.2019 பி.ப 15.00 மணிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக இரு பிரதிகளில் (மூலப்பிரதி/நகல்) தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது.

06. கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட கடித உறைகள் 2019.06.13 அன்று பி.ப 03.00 மணிக்கு கூறுவிலைகள் சமர்ப்பித்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் சமூகமாயிருப்பின் அவர்கள் முன்னிலையில் எமது செயலகத்தில் திறக்கப்படும்.

07. கேள்வி கோரலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre Bid Meeting) மாநாட்டு மண்டபம். பிரதேச செயலகம். தென்மராட்சி. சாவகச்சேரி அலுவலகத்தில் 07.06.2019 ஆம் திகதியன்று மு.ப 10.00மணிக்கு இடம்பெறும்.

| BID ID | வேலை விபரம் GAMPERALIYA - ROAD - STAGE - IV | Estimated Cost (Rs.) In million (without VAT) | Road Length | Contract Period | Grade | Security Amount |
|---|---|---|---|---|---|---|
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/01/2019 | 01. Construction of Pookaththai Road at KAITHADY NORTH. J/288. | 1.29 | 267M | 2 Months | C8 or Above | 47000.00 |
| | 02. Construction of Kottakuddai Road at KAITHADY EAST. J/289. | 0.86 | | | | |
| | 03. Construction of Pulam Road at KAITHADY WEST. - J/293. | 1.28 | 180M | | | |
| | 04. Construction of Kumaranagar Community Center Road at KAITHADY CENTER. - J/290. | 1.29 | 267M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/02/2019 | 01. Reconstruction of Valanthanai Uvari Road at KAITHADY SOUTH EAST. J/292. | 0.42 | 59M | 2 Months | C8 or Above | 22000.00 |
| | 02. Renovation of Valarmathi South West Lane at KAITHADY SOUTH EAST. -J/290 | 0.85 | 150.5M | | | |
| | 03. Renovation of Public Library Road at KAITHADY SOUTH EAST. - J/292. | 0.59 | 41M | | | |
| | 04. Renovation of Public Library Road at KAITHADY SOUTH EAST. - J/292. | 0.42 | 29M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/03/2019 | 01. Construction of Iyanar Road. J/294. | 0.85 | 120M | 2 Months | C8 or Above | 28000.00 |
| | 02. Renovation of Thachchanthoppu Murugan Kovil Road at NAVATKULI EAST. - J/295. | 0.85 | 178M | | | |
| | 03. Renovation of Thachchanthoppu Murugan Kovil Road at NAVATKULI EAST. - J/295. | 0.85 | 178M | | | |
| | 04. Construction of School Side Pond Road at NAVATKULY EAST. - J/295. | 0.25 | 36M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/04/2019 | 01. Construction of Srimurugan Road at NAVATKULY. - J/296. | 0.85 | 141M | 2 Months | C8 or Above | 29000.00 |
| | 02. Renovation of Kalayaparan Koddai Road at KAITHADY NAVATKULI. - J/297. | 0.42 | 60M | | | |
| | 03. Renovation of Kalayaparan Koddai Road at KAITHADY NAVATKULI. - J/297. | 0.85 | 120M | | | |
| | 04. Renovation of Kannakai Amman Road at THANANKILAPPU NAVATKULI. - J/299. | 0.85 | 119M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/05/2019 | 01. Construction of Kandal Kaadu Road at THENMADDUVIL. J/310. | 0.42 | 60M | 2 Months | C8 or Above | 21000.00 |
| | 02. Construction of Boundary Road at KAITHADY NUNAVIL. - Stage II - J/309. | 0.42 | 60M | | | |
| | 03. Construction of Madduvil Centre vevil Road at MADDUVIL CENTRE. - Stage II - J/312. | 0.42 | 60M | | | |
| | 04. Renovation of Madduvil East Alady Lane at MADDUVIL. | 0.85 | 126M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/06/2019 | 01. Renovation of Allarai North Road Connecting with Allarai Meesalai Boundary Road 1st Lane at ALLARAI - J/322 | 1.70 | 232.4M | 2 Months | C8 or Above | 34000.00 |
| | 02. Renovation of Allarai North Road Connecting with Allarai Meesalai Boundary Road 2nd Lane at ALLARAI - J/322 | 1.70 | 232.4M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/07/2019 | 01. Renovation of Arukampulam Pillaiyar Kovil Road Balance Work - J/322 | 1.70 | 232.4M | 2 Months | C8 or Above | 34000.00 |
| | 02. Renovation of Allarai North Road Connecting with Allarai Meesalai Boundary Road 3rd Lane at ALLARAI - J/322 | 1.70 | 232.4M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/08/2019 | 01. Renovation of Maruthady Allarai Vellampokkaddy Road - J/323 | 1.70 | 232.5M | 2 Months | C8 or Above | 46000.00 |
| | 02. Renovation of Vellampokkaddy Center Road Connect Allarai Boundary Road. - J/323 | 1.70 | 232.4M | | | |
| | 03. Construction of Vellampokkaddi Seelan Road at VELLAMPOKKADDI - J/323 | 1.28 | 700M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/09/2019 | 01. Renovation of Punkadipillaiyar kovil Road at KACHCHAI. - J/324 | 1.70 | 232.4M | 2 Months | C8 or Above | 25000.00 |
| | 02. Construction of Koddaiyadi Paathala Vairavar Road at KACHCHAI. J/324 | 0.85 | 115.5M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/10/2019 | 01. Construction of Vaakaiyadi Road at PALAVI. - J/325. | 1.70 | 232.3M | 2 Months | C8 or Above | 34000.00 |
| | 02.Renovation of Palavi Pootharajar Road. J/325. | 0.85 | 115.5M | | | |
| | 03. Renovation of Palavi South Karththikai Pillaiyar Kovil Road. | 0.85 | 115.5M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/11/2019 | 01. Renovation of Kojilamanai Internal Road at MEESALAI RAMAVIL. - J/320. | 0.85 | 112M | 2 Months | C8 or Above | 38000.00 |
| | 02. Renovation of Kodikamam Market Road. - J/326. | 0.85 | 182M | | | |
| | 03. Construction of Grama Koodu Road at KODIKAMAM CENTRE. - J/327. | 0.85 | 250M | | | |
| | 04. Construction of Meesalai North Maruthady Joint Road - J/327. | 1.28 | 174M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/12/2019 | 01. Renovation of Ushan Thavasikulam Elai Veethy to USHAN KETPELI ROAD AT USHAN -J/329 - I | 0.86 | 178M | 2 Months | C8 or Above | 21000.00 |
| | 02. Renovation of Ushan Thavasikulam Elai Veethy to USHAN KETPELI ROAD AT USHAN -J/329 - II | 1.29 | 267M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/13/2019 | 01. Construction of Karampakam Vethakaal Road at KARAMPAKAM. | 0.85 | 100M | 2 Months | C8 or Above | 25000.00 |
| | 02. Renovation of Kayankadavai Siravil Vayalveli Road at KARAMPAKAM. - Stage I - J/330 | 1.27 | 153M | | | |
| | 03. Renovation of Kayankadavai Siravil Vayalveli Road at KARAMPAKAM. - Stage II - J/330 | 0.42 | 50M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/14/2019 | 01. Renovation of Nakundan Road at MIRUSUVIL SOUTH. - J/336. | 1.28 | 182M | 2 Months | C8 or Above | 34000.00 |
| | 02. Renovation of Nakundan Road at MIRUSIVIL SOUTH. Stage - II - J/336. | 0.85 | 119M | | | |
| | 03. Renovation of Kudamiyan aathi Sivan Road at KUDAMIYAN VARANY. - J/337. | 1.27 | 149.5M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/15/2019 | 01. Construction of Muruka Udaiyar Pond Road at IDAIKURICHCHI. - J/341. | 0.85 | 115.3M | 2 Months | C8 or Above | 46000.00 |
| | 02. Renovation of Varany Kudaththanai Road and Poovarasady Pillaiyar Connecting Road at VARANY. - J/341 | 1.70 | 225M | | | |
| | 03. Renovation of Madaththu Kulaththu Back Side Road at IDAIKURICHCHI. J/341. | 1.19 | 161M | | | |
| | 04. Construction of Poovarasa Pillaiyar Kovil Road at IDAIKURICHCHI. -J/341. | 1.28 | 174M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/16/2019 | 01. Renovation of School Road at VARANY NORTH. J/339. | 0.85 | 115.3M | 2 Months | C8 or Above | 22000.00 |
| | 02. Renovation of Navaladi South Road at MASERI. - J/340. | 0.85 | 115.3M | | | |
| | 03. Construction of Navaladi Pillaiyar Road at MASERI. J/340. | 0.42 | 56.8M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/17/2019 | 01. Renovation of Iraikeni Road at NAVATKADU. J/338. | 1.02 | 139M | 2 Months | C8 or Above | 22000.00 |
| | 02. Renovation of Thikkil Road at KARAMPAKURICHCHI. - J/342. | 0.85 | 115.3M | | | |
| | 02. Renovation of Thikkil Road at KARAMPAKURICHCHI. - J/342. | 0.41 | 56.7M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/18/2019 | 01. Construction of C.C.T.M School Road at ELUTHUMADDUVAL SOUTH. J/333 | 0.85 | 122M | 2 Months | C9 or Above | 17000.00 |
| | 02. Construction of Eluthumadduval North 1st Cross Street at ELUTHUMADDUVAL NORTH. J/334. | 0.85 | 108M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/19/2019 | 01. Renovation of Kurukkal Maavadi Vayakarai Road at MIRUSUVIL NORTH.J/335. | 1.28 | 182M | 2 Months | C9 or Above | 12000.00 |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/20/2019 | 01. Construction of Farm Road at MANTHUVIL EAST. - J/345. | 0.42 | 56.7M | 2 Months | C8 or Above | 21000.00 |
| | 02. Renovation of Kela Pond Road at Manthuvil North VARANY. - J/347. | 0.85 | 97M | | | |
| | 03. Renovation of Kelaththu Amman Road at MANTHUVIL NORTH. J/347. | 0.85 | 108M | | | |
| TN/DS/FIN/PRO/RRDP/ROAD-IV/21/2019 | 01. Reconstruction of Cultural Hall Front Lane. | 0.85 | 125M | 2 Months | C9 or Above | 8500.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிரதேச செயலகம்,**
**தென்மராட்சி, சாவகச்சேரி.**


# வாழ்க்கைப் பாடம்

சூரியன் மெதுவாக கிழக்கு வானத்திலிருந்து மேமேலே எழுந்து கொண்டிருந்தது. இலைகளில் படாந்திருந்த பனித்துளிகளை உதறியபடி விழித் தெ ழுந்தது மாமரம். "இன்றைக்கு நல்ல நாளாக இருக் கவேனும். அதற்காகக் கடவுளிடம் வேண்டுகிறேன் என சூரியனைப் பார்த்து வேண்டிக் கொண்டது.

ம்... நல்ல நாளா? உனக்குத் தான் நல்ல நாளெல்லாம் எங்களுக்கு என்றைக்குமே கெட்ட நாள்தான் என்றது அருகிலிருந்த வேப்ப மரம்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்? ஒன்றும் புரியாமல் கேட்டது மாமரம்.

உன்னுடைய மாம்பழங்கள் போல் என்னோட பழங் கள் இனிப்பாக இல்லையே. மிகவும் கசப்பாகவேயுள் ளன. இலைகளும் கூட கசப்பாக உள்ளன என்றது வேப்ப மரம். இப்போது அதனருகில் நின்று கொண்டி ருந்த வாழைமரம் "ஆமா என் னோட நிலைமையும் அப்படித் தான். வேகமாகக் காத்தடித் தால் கீழே சாஞ்சிடுவேன். என்னோட உடம்பு மிகவும் பலவீனமாக இருக்கு அந்தத் தென்னை மரம் எவ்வளவோ உயரமாக வளர்ந்திருக்கும் இருந்தாலும் எவ்வளவு காத்த டிச்சாலும் கீழ விழாமல் உறு தியா நிற்குது. அது மாதிரி பல மான உடம்பு எனக்கில்லையே என அலுத்துக் கொண்டது.





நான் மட்டும் என்னவாம். மிக வும் உயரமாக இருக்கிறதால சூரிய ஒளி மண்டையைப் பிளக்குது. வேப்ப மரத்தை மாதிரி மத்தவங்களுக்கு என்னால் நிழல் கொடுக்க முடியலையே எனத் தன்னிடம் உள்ள குறையைக் கூறியது தென்னை மரம். "நீங்க எல்லோரும் உங்க கிட்ட இருக்கிற குறைகளை மட்டுமே பெரிசாச் சொல் லுறீங்க எனக் கூறி சற்று நிறுத்திய மாமரம் மீண்டும் பேச ஆரம்பிப்பதற்கு முன் நான்கு பேர் மாமரத்தின் அருகில் வந்தார்கள்.

இங்கே நல்ல நிழலாய் இருக்கு. இங்கேயே உட்கார லாம் எனக் கூறினான் ஒருவன். அங்கே வேண்டாம். இங்க பாரு வேப்ப மரம் நிக்குது. வேப்ப மர நிழலில் படுத்தா குளு குளுன்று காத்தடிக்கும். உடம்புக்கும் நல்லது எனக் கூறிய இரண்டாமவன் வேப்ப மர நிழ லில் அமர்ந்தான். மற்ற மூவரும் அதைச் சரியென ஏற்று வேப்ப மரநிழலில் அமர்ந்தார்கள். சிறிது நேரம் ஓய்வெடுத்த நால்வருக்கும் பசியெடுத்தது. ஒருவன் மாமரத்தில் ஏறி மாம்பழங்களைப் பறித்துப் போட் டான். மற்றொருவன் அவைகளைச் சேகரித்தான். இன்னொருவன் வாழைமரத்திலிருந்து வாழைப்ப ழங்களைத் தன்னிடமிருந்த சிறிய அரிவாளால் வெட் டியெடுத்தான். மூவரும் வேப்ப மர நிழலுக்கு வந்த னர். நான்காமவன் "பசிக்கு உணவு கிடைச்சாச்சு. தாகத்துக்குத் தண்ணீர்?" எனக் கேட்டான். பக்கத்தில் ஏதாவது குளமிருக்கா எனத் தேடிப் பார்ப்போம்" என நால்வரும் தேடி ஒரு நீர் நிறைந்த குட்டையைக் கண்டு பிடித்தனர்.

குட்டை நீர் அழுக்காக இருந்தது. அந்த நீரைத் தாகத் துக்கு குடிக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தனர். "அண்ணே நீரை விடச் சுவையான நீர் இதோ இருக் கிறது. எனக்கு மரம் ஏறத் தெரியும்" என்று கூறி விறு விறு என்று தென்னை மரத்தின் உச்சிக்குச் சென்று தன் சிறி அரிவாளால் மூன்று நான்கு இளநீர்களை கீழே வெட்டி வீழ்த்தினான்.

மரத்தில் இருந்து இறங்கியதும் வேப்ப மரக்கிளையி லிருந்து சிறிய குச்சியை உடைத்து நால்வரும் பல் துலக்கினர். குட்டை நீரில் வாய் கொப்பளித்தனர். பின்பு வேப்ப மர நிழலில் அமர்ந்து மாம்பழங்களை சாப்பிட் டனர். இளநீர் குடித்தனர். "ஆஹா இந்த மாதிரி விருந்து நான் என்றைக்கும் சாப்பிட்டது இல்லை" என்றனர். நால்வரும் உண்ட மயக்கத்தில் அப்படியே வேப்ப மரநிழலில் சுகமாகப் படுத்துத் தூங்கினார்கள். இப்போது மாமரம் செருமிக்கொண்டு பேச ஆரம்பித் தது. "பார்த்தீர்களா நண்பர்களே! இந்த நால்வரும் உங்களிடம் என்னென்ன நிறைகள் இருக்கு என்று தங்கள் செயல்களால் உணர்த்தி விட்டார்கள். நாம் எம்மிடம் என்னென்ன நிறைகளும் திறமைகளும் இருக்கோ அதனை நினைத்து பெருமைப்பட வேண் டும். அதை வச்சு வாழ்க்கையில் முன்னேற வேணும். நாம் ஒவ்வொருத்தரும் ஏதோ ஒரு வகையில் பிறருக் குப் பயனுள்ளவர்களாகத்தான் பிறந்திருக்கிறோம். நமது வாழ்க்கையும் அப்படித்தான் அமைந்திருக்கு நாம் அதனைத் தெரிந்து கொள்ளாமல் மற்றவர்க ளைப் பார்த்து அது எங்களிடம் இல்லையே என்று நினைத்து வருத்தப்படக் கூடாது" என்றது.



## பாட்டு

பனை நான் உங்கள் மூல வளம் - எனை
அழித்து அனைத்துக்கும் அலையாதீர்!
வாழ்வதற்கு உணவு உறையுள் நான் தருவேன்
வாழ்வளித்து பெற்று பயனடைவீர்
தால வளம் உமது வரம்
முழுவதும் பெறுவது உமது திறன்
வளமான வாழ்வுக்கு வளர்த்திடு எமை
சுய தொழில் சுபீட்சம் காண்பாய்!
வெறுக்காதீர் கருமை நிறமென்று
தரணிக்கு நான் தேவை



## இலங்கையின் கல்வி பற்றிய தகவல்கள்

1. இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னாங்கர(1945)
2. இலவச பாட நூல் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்படுகிறது.
3. இலவச பாடசாலைச் சீருடை 1993ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்படுகிறது.
4. பாடசாலைச் சாரணர் இயக்கம் 1917ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
5. தேசிய பாடசாலை 1987ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
6. இலங்கைப் பல்கலைக்கழகம்(கொழும்பு) 1942ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
7. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
8. மகாபொல புலமைப் பரிசில் திட்டம் 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
9. தேசிய கல்வி ஆணைக்குழு 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
10. இலங்கையின் திறந்த பல்கலைக்கழகம் 1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## மரணஅறிவித்தல்

### சின்னத்தம்பி நல்லதம்பி



தோற்றம் 08.01.1935 மறைவு 28.05.2019

அராலியைப் பிறப்பிடமாகவும் நாகம்மாள் கோயில் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி . நல்லதம்பி 28.05.2019 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வைரிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான முருகன் - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் தவயோகராணி, நாகேஸ்வரன் (பிரான்ஸ்), சோதிமலர், சிவஞானகி, புஸ்பநாதன் (லண்டன் - போதகர்), புஷ்பகலா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், புஸ்பராணி (பிரான்ஸ்), ரவிச்சந்திரன், காலஞ்சென்ற சிவனேசன், ஜமுனா (லண்டன்), லக் ஷ்மனன் (போதகர் கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (31.05.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்வாரி சேமக்காலை தாவடியில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.



# உலகில் பெரிய இலை



உலகின் மிகப் பெரிய வட்ட வடிவமான இலை நீரில் வளரும் ஓர் இலையாகும். இதன் பெயர் விக்டோரியா ரிஜியாவாகும் பார்ப்ப தற்கு பெரிய தாம்பாளத்தட்டுப் போலக் காணப்படும். இது அல்லி வகையைச் சேர்ந்தது. இந்த இலை 3 மீற்றர் விட்டம் வரை கூட வளரும். சராசரியாக இந்த இலையின் குறுக்களவு 1.85 மீற்றரா கும். வட்ட வடிவமான இலை மட்டுமே மேல் நோக்கி நீரில் காணப் படும். இதன் அடிப்பகுதியில் வளரும் தண்டு 7 முதல் 8 மீற்றர் நீளத்தில் இருக்கும். தண்டுப் பகுதி முழுவதும் தண்ணீருக்குள்ளேயே இருக்கும் இதன் பிறப்பிடம் இங்கிலாந்து. இந்த இலையைக் கண்ட விக்ரோரியா மகாராணி-இதை விக்ரோரியா ரிஜியா என்று அழைத்தார் எனக் கூறுகிறார்கள். ஆனால் இதன் உண்மையான பெயர் அமேசானிகா. இது இங்கிலாந்து தவிர பிரான்ஸ், கயானா மற்றும் அமெரிக்காவிலும் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக அமேசன் காட்டில் இந்த அரிய வகை இலை அதிகம் உள்ளது.

**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**மாணவர் அனுமதி**

**13 வருட உத்தரவாதக் கல்வி - 2ஆம் பரீட்சார்த்த திட்டம் - 2019**
**கல்விப் பொதுத் தராதர தொழிற்துறைக் கல்வி**
**தொழிற்துறைப்பிரிவு மாணவர் அனுமதி**

எமது பாடசாலையில் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத் தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி திட்டத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறிப்பு : கற்கை நெறியினை பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்களுக்கு NVQ 4 கல்வி சான்றிதழும் கொடுப்பன வுடன் கூடிய தொழிற்பயிற்சியும் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு : 07.06.2019**

(IN 10333)(14,17)

**அதிபர்.**

## மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருபாநிதி அருள்பிரகாசம்
### (கிருபா அம்மா)



பிறப்பு 14.03.1941 கர்த்தரின் அழைப்பு 27.05.2019

கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை பிறப் பிடமாகவும் சுண்டிக்குளி, காட்டுக் கந்தோர் ஒழுங்கையையும் (Pearl Bank) நல்லூர் வைமன் வீதியையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாநிதி அருள்பிரகாசம் (கிருபா அம்மா) கடந்த (27.05.2019) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு கந்தப்பு மாஸ்டர் அனா சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற டேவிட் சின்னத்தம்பி நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருள்பிரகாசத்தின் அன்பு மனைவியும் பிரியதர்சினி, அருள்நேசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் மகேந்திர ராஜா, அனுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்சித்தா அகிலன், சலுஜா யாழன், பிரசன்னா சுமி, டினோக்கா ஷான், பென்ஜமின் அருள்றிக்ஷன் றோதா அனுடிலிஷியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பராநிதி, Dr.பரமோதயன், தயாநிதி , ஞானோதயன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரக் ஷன், அஸ்வி, யஷி, யஷோன், ஷலோமி, சமி, யஷ்வா, ஷானியா, ஷெயோளி ஆகியோரின் அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (31.05.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல.61, வைமன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**A.Arulnesan**
**0757379238, 0779898596**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்
## ஐயாத்துரை ஸ்ரீகுமார்



யாழ். நல்லூர் வைமன் வீதி 18/18 இல் வசித்த ஐயாத்துரை ஸ்ரீகுமார்நேற்று(29.05.2019) புதன்கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான ஐயாத்துரை சோதி யம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்க ளான கேதீஸ்வரநாதன் கமலாம்பிகை தம்பதியினரின் மருமகனும் கமலாதேவியின் (இந்திரா, ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ்.இந்துமகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் ஸ்ரீபிரியா (சோலை வரிப்பகுதி மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஸ்ரீவித்தியா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தர்மகுமாரன் (தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), சஞ்சீவ் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனும் நேருக்சன் (பொஸ்கோ பாடசாலை), சிஜிசன், ஐஸ்வர்யா (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் யோகசுந்தரம், சிவசுப்பிரமணியம், கோசலாதேவி, ஸ்ரீசற்குணம், ஸ்ரீதரன், ஞானமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வைமன் வீதி நல்லூரில் அவரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**18/18, வைமன் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

*ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக*

## கலாபூஷணம் ஸ்தபதி
## சுப்பிரமணியம் இராசரத்தினம்
*(விநாயகர் சிற்பாலயம்)*



திருநெல்வேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் நேற்று (29.05.2019) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அன்னப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இலங்கநாயகியின் (நெசவு போதனா ஆசிரியர்) பாசமிகு கணவரும் ரேனுகா (நோர்வே), வக்சலா (யா/பெரியபுலம் மகாவித்தியாலயம், ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமார் (நோர்வே), பாலமகிந்தன் (கணினி வளநிலையம், தீவகம்) ஆகியோரின் மாமனாரும் வருண், கவிஷ்னா ஆகியோரின் தாத்தாவும் காலஞ்சென்ற கனேஸ்வரி மற்றும் தவமணிதேவி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி இரத்தினகோபால், குணபாலசிங்கம், அன்னம்மா ஸ்தபதி ஜீவரத்தினம் மற்றும் புஸ்பராஜலிங்கம், நாகம்மா, பாக்கியம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.86 , தலங்காவற்பிள்ளையார் கோவிலடி,**
**திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 222 4839**

## மரண அறிவித்தல்



## திருமதி நாகேஸ்வரி யோகராசா

சுதுமலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாகேஸ்வரி யோகராசா 29.05. 2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல் லையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மக ளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஆனந்தராசா, ராசமலர், கமலாசனி, ஜெகநாதன், சிவநாதன், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சுயாதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கம் (உரிமையாளர்-குறிஞ்சி பாமசி திருநெல்வேலி), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற சாம்பசிவம் ஆகியோரின் மைத்துனியும், தபோதினி (சுவிஸ்), தர்மினி, அகிலன் (குறிஞ்சி பாமசி), தயசீலன் (வீதி அபிவிருத்தி திணைக்களம்.யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகுமாரன் (சுவிஸ்), கிருபாகரன் (கொழும்பு), மயூரி, கல்யாணி ஆகியோரின் பாசமிகு மாமி யாரும், பவிந்தன், பவிசன் (சுவிஸ்), பவித்ரா, சோபியா, அட்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவடி வீதி, சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பபத்தினர்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பன்னாட்டுச் சமூகம் எதையாவது செய்யுமா?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சிறுபான்மை இன மக்களைக் குறிவைத்து அடக்குமுறைகள் தொடர்கின்றன. அவற்றை உடனடியாகப் பன்னாட்டுச் சமூகம் தடுத்து நிறுத்த வேண்டும். அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது.

இவ்வாறு, தன்னைச் சந்தித்த ஆஸ்திரேலிய நாட்டுத் தூதுவரிடம் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன். இலங்கைக்கான ஆஸ்திரேலிய நாட்டுப் புதிய தூதுவராக டேவிட் ஹொலி நியமிக்கப்பட்டதை அடுத்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுவெடிப்புக்களின் பின்னர் தமிழ், முஸ்லிம் இனமக்களைக் குறிவைத்துக் கைதுகள், சோதனைகள், கெடுபிடிகள் மற்றும் வன்முறைகள் தொடர்கின்றன என்றும் அவசரகாலச் சட்டத்தால் எமது மக்கள் ஒன்றும் செய்யமுடியாது வாழ்கின்றனர் என்றும் பன்னாட்டுச் சமூகம் உடனே தலையிட்டு இந்த அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இரா. சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்த செவ்வாய்க்கிழமை, இலங்கை, ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் புதிய ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது. கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விருத்தி செய்வது தொடர்பான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு அது.

இந்த கிழக்கு கொள்கலன் முனையத்தை இயக்குவதற்காக உருவாக்கப்படவுள்ள முனைய நடவடிக்கை நிறுவனத்தில் இலங்கை, ஜப்பான், இந்தியா ஆகியநாடுகள் பங்குகளைக் கொண்டிருக்கும். அதில் இலங்கை 51 விழுக்காடு பங்குகளையும் ஜப்பான் மற்றும் இந்தியா 49 விழுக்காடு பங்குகளையும் கொண்டிருக்கும் வகையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை எப்படி செயற்படுத்துவது என்பது தொடர்பானவிதிகள், நியதிகள் இனிமேல் உருவாக்கப்படும்.

இலங்கையில் ஆழமாக வேரூன்றி உள்ள சீனாவின் ஆதிகத்துக்கான பதில் நடவடிக்கையாகவே ஜப்பான் மற்றும் இந்தியா இணைந்து கொழும்புத் துறை முகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய இருக்கின்றன. அதாவது இலங்கையில் சீனா உறுதியான காலடியை வைக்கும்போது அதேயளவுக்கு அல்லது அதற்கு மேலான உறுதியோடு தமது காலடியும் இங்கு இருக்கவேண்டும் என்கிற தர்க்க நியாயத்தோடுதான் ஜப்பான், இந்தியாவின் இந்த நகர்வுகள் உள்ளன.

இலங்கைத் தமிழர்கள் பன்னாட்டுச் சமூகம் என்று கூறிக்கொள்வதன் மூலம் அர்த்தப்படுத்திக்கொள்ளும் மேற்குநாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் போன்றவற்றின் இலங்கை தொடர்பான அணுகுமுறை, நகர்வு என்பவற்றுக்கான ஓர் உதாரணமே கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம்.

அதாவது, கொழும்பு சீனாபக்கம் அடுகிடைபடுகிடையாகப் போய்விடாமல் இருப்பதற்காக அதனோடு மேலும் நெருங்கிச் செயற்படுவது என்கிற நிகழ்ச்சி நிரலுக்குள்ளேயே தமிழர்களின் பன்னாட்டுச் சமூகம் சுற்றிவருகின்ற நிலையில், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் நலன்கள் குறித்து இந்த நாடுகள் அக்கறை செலுத்தும், கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது எந்தளவு தூரம் சாத்தியமானது ?

இலங்கைத்தமிழர்களை விடவும் முஸ்லிம்களை விடவும் இந்தப் பன்னாட்டுச் சமூகத்துக்குக் கொழும்பு அதிகம் தேவையாக இருக்கும்போது தமிழர்கள், முஸ்லிம்கள்மீதான அடக்குமுறைகளைத்தடுக்கப் பன்னாட்டுச் சமூகம் கண்டன அறிக்கைகளுக்கு மேல் எதையாவது செய்யும் என்று எதிர்பார்த்து நாம் எதையும் செய்யாதிருப்பது பயன்தரக்கூடிய பாதையல்ல.



# நீதியின் கண்களை திறக்குமா அப்பாவிகள் வடித்த கண்ணீர்?

இந்துமதி

இலங்கைப் படையினருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மீண்டும் கருத்து வெளியிட்டிருக்கிறார் கோத்தபாய ராஜபக்ச. படையினர் இந்த நாட்டிலிருந்து தீவிரவாதத்தை ஒழித்தவர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்களை எவருமே சுமத்த முடியாதெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

**படையினரின் நடவடிக்கைக்கு பொறுப்பானவர் கோத்தபாயவே**

இறுதிப் போர் இடம்பெற்ற போது பாதுகாப்புச் செயலர் பதவியை வகித்த கோத்தபாய படையினரின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்துள்ளார். அவரது சகோதரான மகிந்த ராஜபக்ச அரசதலைவர் என்ற வகையில் முப்படைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். இதனால் படைகளைக் கையாள்வதில் கோத்தபாயவுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றபோது இடம்பெற்ற படுகொலைகள் உலக வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத அத்தியாயங்களைப் படைத்து விட்டன. ஏதுமறியாத அப்பாவி மக்கள் துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் காணாமல் போயினார். மனித குலத்துக்கே எதிரான மனித உரிமை மீறல்கள் தாரளமாக இடம்பெற்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எவருமே முன்வர வில்லை. இதனால் படையினர் தம் எண்ணம் போன்று செயற்பட முடிந் தது.

போரின் போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றதை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஏற்றுக் கொண்டதன் காரணமாகவே போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறவேண்டுமென்ற தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது. ஆனால் இலங்கை அரசு விசாரணைகளை நடத்தாமல் கால அவகாசம் கேட்டு காலத்தை இழுத்தடித்து வருகின்றது. பன்னாட்டுப் பொறிமுறையின் கீழான நீதியான விசாரணைகள் இடம்பெறவேண்டுமென்பதே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கையாகும். இதன் மூலமாகவே தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்குமென அவர்கள் நம்புகின்றனர்.

> போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையிலும் தமிழர் மக்கள் தமது பிரச்சினைகளில் எவற்றுக்குமே தீர்வுகாணா நிலையில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

**துயரத்தின் சாட்சிகளாக உள்ள முள்ளிவாய்க்கால் நினைவுகள்**

போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையிலும் தமிழர் மக்கள் தமது பிரச்சினைகளில் எவற்றுக்குமே தீர்வுகாணா நிலையில் அவலவாழ்வு வாழ்கின்றனர். போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மே 18ஆம் நாள் முள்ளிவாய்க்கலில் கூடிய ஆயிரக் கணக்கான உறவுகள் கண்ணீர் சிந்த அங்கு நின்ற காட்சி துயரத்தின் எல்லையைத் தொட்டுவிட்டது. ஆனால் இதே நாளில் தென்னிலங்கையில் போர் வெற்றியைக் கொண்டாடும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஒரே நாட்டின் ஒரு பகுதி சோகத்தில் மூழ்கியிருக்க இன்னொரு பகுதி வெற்றிக் களிப்பில் மிதப்பதை இந்த நாட்டில்தான் பார்க்க முடிகின்றது. இந்த வெற்றிவிழா நிகழ்வுகளில் அரச தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பங்கு பற்றியதுடன் முதன்மை உரைகளை நிகழ்த்தியதும் குறிப்பிடத்தக்கது.

படையினர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பித்தவர் என்ற வகையில் கோத்தபாயவும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையிலுள்ளார். படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமானால் கோத்தபாயவும் பாதிப்புக்குள்ளாவாரென்பதை நம்ப முடியும். இதன் காரணமாகவும் அவர் படையினருக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுவதை எதிர்க்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இதேவேளை இறுதிப் போர் இடம்பெற்ற போது போர்க்குற்றம் எதுவுமே இடம்பெறவில்லையென முன்னாள் அரச தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச கூறியுள்ளமை எந்த வகையில் நியாயமானது என்பது தெரியவில்லை. பொறுப்பான பதவியை வகித்த இவரைப் போன்றவர்கள் இவ்வாறு கூறுவது அந்தப் பதவிக்கே இழுக்கானதென்பதை மறந்துவிட முடியாது.

இந்திய இராணுவத்தால் முடியாததை எமது இராணுவத்தினர் புலிகளை அழித்ததன் மூலமாகச் சாதித்துவிட்டதாக அரசதலைவர் தெரிவித்துள்ளார். போர் வெற்றியின் 10 ஆவது ஆண்டு வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இதை தெரிவித்தார். 1987ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அமைதிப்படை என்ற பெயரில் இங்கு வந்த இந்தியப்படைகள் அமைதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக அழிவு வேலைகளிலேயே முனைப்புக்காட்டின. இறுதியில் ஏராளமான படையினரை இழந்து பெருத்த அவமானத்துடன் நாடுதிரும்ப வேண்டியதாயிற்று. இறுதிப்போரில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளின் உதவிகளைப்பெற்று இலங்கையால் புலிகளைவெல்ல முடிந்தது. இந்தப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இதுதொடர்பாக இலங்கையின் ஆட்சியாளர்கள் எதுவுமே கூறுவதில்லை. தமிழர்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற உணர்வை அவர்களிடம் சிறிதுகூட எதிர்பார்க்க முடியவில்லை. போர் வெற்றியை மட்டுமே பேசுகின்ற இவர்கள் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பேசுவதற்கே அஞ்சுகின்றனர்.

முள்ளிவாய்க்களில் தமது உறவுகளை நினைத்து தமிழர்கள் வடித்த கண்ணீருக்கு அதற்குக் காரணமாக இருந்தவர்கள் என்றே ஒருநாள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். குற்றம் புரிந்தவர்கள் வாழ்க்கையில் நிம்மதியாக இருந்ததாகச் சரித்திரமே கிடையாது. இது இந்த நாட்டுக்கும் பொருத்தமானது.

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM
வியாழக்கிழமை 30 மே 2019


# காலத்தால் முந்திய இந்து மத தொன்மைச் சின்னங்கள் பௌத்த சின்னங்களாகத் திரிபுபடுத்தப்படுகின்றன

## தொல்லியற் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு இந்து மா மன்றம் கடும் கண்டனம்

கொழும்பு, மே 30

காலத்தால் முந்திய இந்துமதத் தொன்மைச் சின்னங்களை மாற்றியமைத்து அவற்றைப் பௌத்த சின்னங்களாகத் திரிபுபடுத்தி வரலாற்றை மாற்றும் கைங்கரியத்தைத் தொல்லியற் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றது இலங்கை இந்து மா மன்றம். இது குறித்து இன்றைய ஆட்சியாளர்களும் பாராமுகமாக இருந்து வருவதையும் அது கண்டித்துள்ளது.

இது பற்றி மன்றம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆண்டுகள் பல கடந்தாலும், ஆட்சிகள் பல மாறினாலும் இந்த நாட்டில் வாழும் இந்துக்கள் மீது மத ரீதியாக ஏதோ ஒரு வகையில் அடக்குமுறைகளும் துன்புறுத்தல் களும், அதர்மமான செயல்களும் நடந்துகொண்டேயிருக்கின்றன.

2015ஆம் ஆண்டில் 'நல்லாட்சி' என்ற வாசகத்துடன் புதியவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த போது, இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாகி சமாதான சகவாழ்வு மலரும் என்ற பெரும் நம்பிக்கை இந்த நாட்டு தமிழ் மக்களுக்கு இருந்தது. ஆனால் அரசோ, அரச நிறுவனங்களோ செயற்பட்டு வரும் முறையானது, தமிழ் மக்களின் அந்த நம்பிக்கையைக் குறைத்து இல்லாமற் செய்வது போலுள்ளது.

ஈழத்திருநாட்டின் பலபகுதிகளிலும் இந்துமதத் தொன்மைச் சின்னங்கள் காணப்படுகின்றன. அந்தச் சான்றுகள் காலத்துக்கு முந்திய வரலாற்றைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றையெல்லாம் மாற்றியமைத்து, அவற்றைப் பௌத்த சின்னங்களாகத் திரிபுபடுத்தி, வரலாற்றை மாற்றும் கைங்கரியத்தை 'தொல்லியற் திணைக்களம்' முன்னெடுத்துவருகின்றது.

திருகோணமலைச் சிவன் ஆலயம், கன்னியா வெந்நீரூற்றுக்கள், வடக்கில் மன்னார் திருக்கேதீச்சரம், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், வெடுக்கு நாரிமலை எனப் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொல்லியல் திணைக்க ளத்தால் பட்டியற்படுத்தப்பட்டு, அங்கு பௌத்த விகாரைகள் அமைப்பதற்குத் திணைக்களம் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவிவருகின்றது.

ஓர் அரச திணைக்களம் இந்த நாட்டுமக்களுக்கு இனமதமொழி வேறுபாடுகளின்றிச் செயலாற்ற வேண்டியது சட்டத்தின்படி கட்டாயமானது.

தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இந்துஆலயங்கள் மற்றும் தமிழரின் புராதன வாழ்விடங்கள் தொடர்பில் பலதடவைகள் அரசுக்கு முறையிட்டும் அரசும் பாராமுகமாக இருந்துவருகின்றது. இது எமது மக்களை வேதனைகொள்ளச் செய்துள்ளது.

இந்தவகையில்தான் திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் அமைந்துள்ள காணியும் தொல்லியல் திணைக்களத்தால் புராதன இடமாகப் பட்டியற்படுத்தப்பட்டு அந்தப் பிள்ளையார் கோவில் கட்டட வேலைகளுக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்ட அதேவேளை, அருகிலுள்ள வில்கம் விகாராதிபதி தலைமையில் சிலர் அந்தக் காணியில் அடாத்தாகக் குடியேறி விகாரை அமைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் அகில இலங்கை இந்துமாமன்றம் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன், தமது உரிமைகளை மீட்டு எமது பாரம்பரிய சின்னங்களைப் பேணுவதற்கு மாமன்றம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என்றுள்ளது. (உ-த)

# புத்தரின் போதனைகளை பிக்குகளே மீறுகின்றனர்!

## கன்னியாவில் கோவில் அத்திபாரம் உடைப்புக்கு இந்துக் குருமார் அமைப்பு கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 30

வரலாற்றுச் சிறப்பு மிக்க மிகப் புராதனமான கன்னியா வெந்நீரூற்று விநாயகர் ஆலய அத்திபாரம் கிளறப்பட்டு அண்மையில் உள்ள கிணற்றில் இடப்பட்டதாக அறிகின்றோம். அங்குள்ள துறவியின் தலைமையில் இது நடந்துள்ளது. புத்தபகவானின் போதனையைப் பௌத்த பிக்குகள் மீறுவதாகவே இந்தச் சம்பவத்தை நாம் பார்க்கிறோம்

இவ்வாறு இந்து குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது.

கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலய அத்திபாரம் கடந்த வாரம் இடிக்கப்பட்டு கிணற்றில் போடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் விகாரை அமைக்கும் பணியில் அங்குள்ள பிக்கு ஈடுபட்டுள்ளார். அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குருமார் அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது இலங்கை திருநாட்டில் இந்துக்களின் வழிபாட்டிடங்கள் சார்ந்து இலங்கை தொல்லியல் திணைக்களம் அண்ணளவாக எழுபதுக்கும் மேற்பட்ட பகுதிகளை அடையாளமிட்டுத் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. இவை வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த நிலையில் காணப்படுகின்றன.

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியில் பலவித விரும்பத்தகாத செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்து மக்கள் புத்தபெருமானின் போதனைகளுக்கு மாற்றுக்கருத்து கொண்டவர்கள் அல்லர். அவரின் தத்துவ சிந்தனைகளை ஏற்றுக்கொண்டவர்கள். இந்தச் சூழலில் மேற்குறித்த பகுதியில் நடைபெற்று வருகின்ற செயற்பாடுகள் புத்தபகவானின் போதனைகளை மீறுவதாக நாம் கருதுகிறோம். இவ்வாறு வரம்பு மீறி நடைபெறும் செயற்பாடுகளை இலங்கை இந்துக்குருமார் அமைப்பு மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் மனவேதனையையும் பகிர்ந்து கொள்கின்றது.

தொடர்ந்து வரும் காலங்களில் இவ்வாறான சூழல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு பிரதேச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் அனைவரினதும் கடமையல்லவா?

ஆகவே விரைவில் உரிய சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்துமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றார்கள். (த)





சூரியசக்தியில் இயங்கக்கூடியதான

# தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கல்

## தேவையான விவசாயிகள் 7ஆம் திகதிக்கு முன் பதிவுசெய்யவும்

கிளிநொச்சி, மே 30

சூரிய சக்தியில் இயங்கும் தண்ணீர் இறைக்கும் நீர்ப் பம்பிகளை 50 வீத மானியஅடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும். இதைப் பெற ஆர்வமுள்ள கிளிநொச்சி விவசாயிகள் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி விவசாயிகள் அருகிலுள்ள விவசாயப் போதனா சிரியரிடம் அல்லது ஏ-9 வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெற்று நிரப்பி குறித்த திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் 'நாம் பயிரிட்டு நாம் உண்போம்' 2019ஆம் ஆண்டுசெயற்றிட்டத்தின் கீழ் இவை பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

கடந்த வருடம் இதே திட்டத்தின் கீழ் திருவையாறு, புன்ன நீராவி, கந்தபுரம், தர்மக்கேணி முகாவில் மற்றும் பூநகரி பகுதிகளில் சூரியசக்தியில் இயங்கும் தண்ணீர் இறைக்கும் 14 நீர்ப்பம்பிகளை விவசாயிகளுக்கு 50வீத மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு அவை வெற்றிகரமாக இயங்குகின்றன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதைப் பெறுவதன் மூலமாகத் தண்ணீர் இறைப்பதற்கான மின்சாரக் கட்டணமின்றி பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியும். உற்பத்திச் செலவு குறைவடைந்துள்ளது என்று விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# உருளைக் கிழங்குச் செய்கைக்கு இம்முறையும் மானியம் தேவை

## யாழ்ப்பாண மாவட்டச் சமாசம் அரசிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 30

அரை மானிய விலையில் இந்த முறையும் விதை உருளைக் கிழங்கு வேண்டும். அப்போதுதான் உருளைக் கிழங்குச் செய்கையைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளதாகச் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த முறை காலபோக உருளைக்கிழங்குச் செய்கையின் போது அதற்கான விதை கிழங்குகளை அரச மானிய விலையில் செய்கையாளர்களுக்கு வழங்கி வைக்கவேண்டும். கடந்த போகத்தின் காலபோக உருளைக்கிழங்குச் செய்கையின்போது 50 வீத மானிய விலையில் விதைக் கிழங்குகளை அரசு வழங்கியது.

அதேபோன்று இந்தமுறையும் காலபோக செய்கையின்போது அரசு விதை கிழங்குகளை 50 வீத மானியவிலையில்வழங்க வேண்டும். விதை கிழங்குகள் மானிய விலையில் வழங்கி வைக்கும் சமயத்திலேயே செய்கையாளர்கள் இந்த உருளைக் கிழங்குச் செய்கையில் அதிக நாட்டம் கொண்டு ஈடுபடுவார்கள்" என்றார்.


மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு வழங்குதல் தொடர்பாக மாவட்ட விவசாய திணைக்களத்தினர் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த காலத்தில் வெளிநாட்டு விதை உருளைக் கிழங்கு 50 வீத மானிய அடிப்படையில் வழங்கப்பட்டன. விவசாயிகள் ஆர்வமாக உருளைக் கிழங்குச் செய்கையை மேற்கொண்டனர். கடந்த வருடம் சுமார் 220 மெற்றிக் தொன் வெளிநாட்டு விதை உருளைக்கிழங்குகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

பன்னாட்டுச் சந்தையில் டொலரின் விலை அதிகரிப்பால் விதை உருளைக் கிழங்கின் விலையும் கடந்த தடவை அதிகரித்துச் சென்றது. ஆனால் அரை மானியம் என்ற படியால் அதனை விவசாயிகளுக்கு வழங்க முடிந்தது. அரை மானியம் வழங்குவது தொடர்பில் அரசு இன்னமும் அறிவிக்கவில்லை. அரை மானியத்தில் விதை உருளைக்கிழங்குக் கொள்வனவுக்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கவுள்ளது என்றும் தெரியாது.

வெளிநாட்டு மானிய விதைக் கிழங்காக இருப்பினும் சரி உள்நாட்டு விதைக் கிழங்காக இருப்பினும் சரி பெற வேண்டுமானால் 6 மாதங்களுக்கு முன்னரே பதிவுசெய்ய வேண்டும்.

ஆகவே 50 மெற்றிக் தொன் உள்ளூர் 'றெட்ல சோடா' விதை உருளைக் கிழங்கு கொள்வனவு செய்து வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ பெட்டி விதை உருளைக் கிழங்கு சுமார் 6 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கக் கூடியதாக இருக்கும். இது தொடர்பான அறிவித்தல் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது" என்றனர். சில வருடங்களாக வெளிநாட்டு விதை உருளைக் கிழங்கை மானிய விலையில் அரசு விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுத்து வருகின்றது. இந்தமுறை அது பற்றிய தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (து-17)



## வேம்பிராய் மயானத்தை சீரமைக்க நடவடிக்கை

சாவகச்சேரி,மே 30

மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்தை முன்மாதிரியாக மாற்றுவதற்குச் சாவகச்சேரிப் பிரதேச சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்

முதற்கட்டமாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்கள், மயான அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

மயானத்தின் எல்லைப் பகுதியை அடையாளப்படுத்தி அந்தப் பகுதியைக் கனரக வாகனங்கள் மூலம் துப்புரவு செய்து அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்தனர். (ஐ-159)

## கற்பித்தல் சாதனக் கண்காட்சி

கொடிகாமம், மே 30

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான செயற்பாட்டுகளுடன் கூடிய கற்பித்தல் சாதனக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலய அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-159)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

சாவகச்சேரி, மே 30

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலையில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலயக் கல்வி அலுவலகத்தால் வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது கடமையாற்றும் பாடசாலையில் 3 வருடங்கள் தொடர்ச்சியாகக் கடமையாற்றியவராகவும் நியமனம் வழங்கும் பட்சத்தில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் பாடசாலையில் கடமையாற்றக்கூடிய வயதுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விருப்புவோர் விண்ணப்பப் படிவத்தை வலயப் பணியக நிர்வாகப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி ஜூன் 4ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஐ-9)



## கதிர்காமப் பாதயாத்திரைக்குழு திருமலையைச் சென்றடைந்தது

யாழ்ப்பாணம் தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கதிர்காமத்தை நோக்கிப் புறப்பட்ட பாதயாத்திரைக்குழு நேற்று திருகோணமலை நிலாவெளி அம்மன் கோவிலைச் சென்றடைந்தது.

கதிர்காமக் கந்தன் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு வருடந்தோறும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் வேல் பெற்று அங்கிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்குப் பாதயாத்திரை மேற்கொள்ளது வழமை.

இதற்கமைய கடந்த 10ஆம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் இருந்து 25 பேர் கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை மேற்கொண்டனர்.

இந்தப் பாதயாத்திரைக் குழுவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி வலிகாமம் கிழக்கு, தென்மராட்சிப் பிரதேசங்கள் ஊடாகக் கிளிநொச்சி மாவட்டத்தை அடைந்து அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம் சென்று தற்போது 'திருகோணமலையை வந்தடைந்துள்ளது. தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மற்றும் குமண காட்டுப்பகுதி ஊடாக கதிர்காமகந்தன் ஆலயத்தைச் சென்றடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாத யாத்திரைக்குழுவினர் முல்லைத்தீவைத் தாண்டும் வேளையில் அவர்களைச் சந்தித்த சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள், அவர்களது சுகநலன்களைக் கவனித்ததுடன் அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப்பொதிகளை வழங்கிவைத்தார். (ஐ-173)

## வடக்கு மாகாணத்தில் இராணுவத்தால் 37,000 தென்னங்கன்றுகள் மக்கள் காணிகளில் நடுகை

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 578 ஏக்கர் காணிகளில் 37 ஆயிரம் தென்னம் பிள்ளைகள் பயிரிடப்பட்டன. இவற்றில் 247 ஏக்கர் காணியில் 2 ஆயிரத்து 447 தென்னை மரங்கள் பயன்தரு நிலையில் உள்ளன. காணிகள் மக்களிடம் கையளிக்கப்படும்போது தென்னைமரங்களும் கையளிக்கப்படும்.

இவ்வாறு வடக்கு பகுதி இரண்டாம் தர படைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த கமகே தெரிவித்தார்.

இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்க வடக்கு மாகாணக் கிளையின் வருடாந்தக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலியில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடக்கு மாகாணக் கிளையின் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர், செயலர் மற்றும் உறுப்பினர்கள், படை உயர் அதிகாரிகள், வடக்கு மாகாண தென்னை அபிவிருத்திச் சபை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.


பேராசிரியர் சு.மோகன்தாஸ் உரையாற்றுகையில் தென்னை அபிவிருத்திச் சபையினரால் தென்னை மீள்நடுகைத் திட்டத்துக்கு முன்னர் தென்னை உற்பத்தியாளர்களுக்கு இலவசமாகத் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன.

தற்போது தென்னம்பிள்ளைகள் 50 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றன. வடபகுதியில் இன்னமும் மீள் நடுகைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் முன்னரைப் போல பயனாளிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தென்பகுதியில் தென்னை உற்பத்தியை ஊக்குவிக்கத் தென்னம் பிள்ளைகள் உற்பத்தி, தென்னை நோய்த் தடுப்பு, பசளைகள் விநியோகம் , தென்னந் தோட்டங்களுக்கு வேலி அமைத்தல் போன்றவற்றுக்கு அரச மானியங்கள் வழங்கப்பட்டு வருவது போல, வடபகுதி தென்னை உற்பத்தியாளர்களுக்கும் அவ்வாறு மானிய உதவிகள் வழங்கப்படல் வேண்டும் -என்றார்

இதற்குப் பதிலளித்த இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர், தென்னை அபிவிருத்திச் சபையில் போதிய ஆளணி இல்லை எனவும் ஆளணி வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால் பல செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (ஐ-9)

## வாசிப்புத் தொடர்பான போட்டியில் வென்று நுணாவில் மாணவர் இருவர் சீனா பயணமாகின்றனர்



சாவகச்சேரி,மே 30

வாசிப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமும் ஆலோசனைக் கோவையும் 2018 போட்டியில் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மாணவர்கள் இருவர் தேசிய நிலையில் தெரிவாகியுள்ளனர். அவர்கள் சீனாவுக்கு 10 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

நடுவண் கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திச் சபையால் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே " நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள்" என்னும் தலைப்பில் வாசிப்பு போட்டி நடத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்ட கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை மாணவர்களான சஜித்தா துரைசிங்கம், சிறிதரன் சாரங்கன் ஆகியோர் தேசிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்டு 10 நாள்கள் சுற்றுப்பயணமாக சீனா நாட்டுக்கு செல்லவுள்ளனர் என்று பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல் அறிவித்துள்ளார். (ஐ-9)

# யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணியையாற்ற சத்தியமூர்த்திக்குத் தடை

## ஆளுநர் உத்தரவு வழங்கினார்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொடர்பில் கடந்த ஒரு மாதமாக நிலவிய சர்ச்சைக்கு வடக்கு மாகாண ஆளுநர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். அதன்படி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பணிகளை யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரான மருத்துவர் த.சத்தியமூர்த்தி கவனிக்க வேண்டியதில்லை என்றும் அந்தப் பணிகளைப் பிரதிப் பணிப்பாளரான மருத்துவர் தேவநேசனே செய்வார் என்றும் ஆளுநர் பணித்துள்ளார்.



இது பற்றி எழுத்தில் தந்தால் அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சத்தியமூர்த்தி தெரிவித்தார். அதனைத் தருவதாக ஆளுநர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்குப் பல மாதங்களாக எவரும் நியமிக்கப்படவில்லை. பிரதிப் பணிப்பாளராக மருத்துவர் தேவநேசன் பணியாற்றிவருகிறார். இந்த நிலையில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தியை போதனா மருத்துவமனையின் பணிகளுக்கு மேலதிகமாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பணிப்பாளருக்குரிய பணிகளையும் ஆற்றுமாறுகூறி கொழும்பு சுகாதார அமைச்சால் ஒரு மாதத்துக்கு முன்னர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை கொழும்பு சுகாதார அமைச்சின் நேரடி வழிநடத்தலில் உள்ளது. யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாகாணத்தின் வழிநடத்தலில் உள்ளது.

அவ்வாறிருக்கையில் சத்தியமூர்த்தி. போதனா மருத்துவமனையின் பணிப்பாளராகவும் இருந்து கொண்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் இருக்க பல தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டனர். மருத்துவர் சத்தியமூர்த்தி கொழும்பு அமைச்சினதும் மாகாண அமைச்சினதும் வழிநடத்தலில் செயற்படுவது பொருத்தமல்ல. இது மாகாண அதிகாரங்களை மீண்டும் கொழும்பு அரசுக்குத் தாரை வார்ப்பதாக அமைந்துவிடும் என்று சில அரசியல் தரப்பினரும் ஏனைய சில அமைப்புக்களும் தெரிவித்தன.

கொழும்பின் நிர்வாகத்தையும் மாகாணத்துக்கு உட்பட்ட நிர்வாகத்தையும் ஒருவரே மேற்கொள்வது பொறுப்புக்கூறலில் தாக்கம் செலுத்தும் எனவும் மாகாணத்தின் அதிகாரத்தை கொழும்பு இழுப்பதாகவே முடியும் என்றும் தெரிவித்திருந்தனர்.

இது தவிர, யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சில வாரங்களுக்கு முன்னர் நடந்த கூட்டம் ஒன்றில் பணிப்பாளராக யாரைத் தாங்கள் ஏற்றுக்கொள்வது? முதலில் பணிப்பாளர்கள் விடயத்தில் உள்ள சிக்கலைத் தீர்த்தால்தான் பணியாளர்களும் சிறப்பாகப் பணிபுரிய முடியும் என்று பொறுப்பு வாய்ந்த சிலர் சுட்டிக் காட்டியிருந்தனர். இவ்வளவு விடயங்கள் சிக்கலாகவுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிகள் நிலையற்ற தன்மையில் இருந்து வந்தன.

இந்த விடயம் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. ஆளுநரின் தலையீட்டில் இந்த விடயம் அரசதலைவர் செயலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந் தது.

இந்த நிலையிலேயே, ஆளுநர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் மாகாண சுகாதார அமைச்சின் செயலர், பணிப்பாளர், யாழ்ப்பாணப் பிராந்திய சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் தேவநேசன், போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

கொழும்பு அரசின் கடிதம் பெறப்பட்டபோதும் மாகாண சுகாதார அமைச்சினதோ அல்லது மாகாண சுகாதாரப் பணிப்பாளரினதோ ஒப்புதல் இன்றி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கடமைகளைப் பொறுப்பேற்றமை செல்லாது என்று தெரிவித்த ஆளுநர் ராகவன், குறித்த பணியை இனிமேல் ஆற்ற வேண்டாம் என்று வாய்மொழி மூலமாக சத்தியமூர்த்திக்குக் கூறினார்.

எனினும், அங்கு பணியாற்றுமாறு கொழும்பு சுகாதார அமைச்சே பணித்திருந்தது. என்னை அங்கு பணியாற்ற வேண்டாம் என்று எழுத்து மூலமாக அறிவித்தல் தந்தால் அங்கு பணியாற்றுவதை நிறுத்து கிறேன் என்று மருத்துவர் சத்தியமூர்த்தி கூறினார். அதனால் அது பற் றிய அறிவித்தலை எழுத்தில் வழங்குகிறேன் என்று ஆளுநர் தெரிவித்தார். எனினும் குறித்த கடிதம் நேற்று மதியம்வரை மருத்துவர் சத்தியமூர்த்திக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (து-105)

# அறிவுறுத்தல் கூட்டம்

சாவகச்சேரி, மே 30

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் 2020 ஆம் ஆண்டு தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கவுள்ள பெற்றோர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இடம்பெறவுள்ளது.

பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட புதிய சுற்றுநிருபத்துக்கமைய மாணவர்களை இணைப்பது தொடர்பாக பெற்றோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கவே கூட்டம் நடத்தப்படவுள்ளது என்று அதிபர்பொ.நடேசலிங்கம் தெரிவித்தார். (ஜ-9)

# கொடிகாமத்தில் சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம்

கொடிகாமம், மே 30

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம் நேற்று இடம்பெற்றது.

பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு சுந்தர சிவம், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களான சி.சிவதாசன், ந.திருவாச கன், வகுப்பு ஆசிரியர்களான த.மகிழ்ராஜன், திருமதி. கமலினி சந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கான த்னிச் செயற்பாடுகளும், குழுச் செயற்பாடுகளும் இதன்போது இடம்பெற்றன. (ஜ-159)







# வாளுடன் நுழைந்த நபரால் மருத்துவமனையில் பரபரப்பு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் வாளுடன் நுழைந்த நபரால் அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. எனினும் குறித்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் பின்னர் சிகிச்சைக்காக மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் கடந்த திங்கட்கிழமை பகல் இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தரைப் படையினரும் அங்கு காவல் மற்றும் சோதனைக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நோயாளர்கள், அவர்களைப் பார்க்கவரும் உறவினர்கள் ஆகியோர் சோதனையின் பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். இந்த நிலையிலும் ஒருவர் திடீரென வாளுடன் மருத்துவமனைக்குள் நுழைந்தமை அங்கிருந்த பணியாளர்கள், நோயாளர்கள், பார்வையாளர்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியது.

வாளுடன் நுழைந்த நபர் அங்கு பலரையும் ஏசியவாறு இருந்தார். எனினும் யாரையும் துன்புறுத்த முயற்சிக்கவில்லை. தகவல் அறிவிக்கப்பட்டதும் அங்கு வந்த பொலிஸார் குறித்த நபரை மடக்கிப்பிடிக்க முயன்றனர்.

இதற்கிடையில் வாளுடன் நுழைந்தவர் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்பதனை அங்கிருந்த மருத்துவர் ஒருவர் உறுதிசெய்திருந்தார்.

அதன் பின்னர் குறித்த நபர் மடக்கிப்பிடிக்கப்பட்டு மருத்துவ விடுதியில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டார். அதனுடன் நிலமை சுமுகமாகியது. (து-105)

# கிராமங்களின் அபிவிருத்திக்கு இளையோர் பங்களிப்பு தேவை

அச்சுவேலி, மே 30

"கிராமிய மட்டத்தில் மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்வதற்கும் அபிவிருத்தித் திட்டங்களை மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்வதற்கும் இளைஞர்களின் பங்களிப்பு மிக மிக அவசியம். அந்த வகையில் சனசமூக நிலையங்கள் உரிய முறையில் உயிர்த் துடிப்புடன் இயங்க வேண்டும்." இவ்வாறு வலி. கிழக்குப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இராசதுரை திலீபன் தெரிவித்தார்.

அச்சுவேலி தெற்கு நாவலம்பதி கலாநிதி சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தின ராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஜனநாயக பண்புசார் நிலை யில் கிராமிய மட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது மக்களின் பங்களிப்புக்கு வழி வகுக்கும். தமது கிராமத்துக்கான தேவைகளை இளைஞர்கள் இனம்கண்டு நிறைவு செய்ய முன்வர வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் ஒற்றுமை இன்மை மேலோங்கி வருகின்றது.

இந்த நிலையில் கிராமிய மட்டத்தில் சமூக ஒற்றுமையை நிலை நாட்டுவதில் இத்தகைய நிகழ்வுகள் மிக மிக அவசியம். கிராம மட்டத்தில் மக்களின் பங்களிப்புடன் ஜனநாயக பண்புசார் நிலையில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் வெற்றி பெறும்.

இந்த வகையில் இளைஞர்கள் உயிர்த் துடிப்புடன் செயற்பட வேண்டும். சனசமூக நிலையங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்" - என்றார் வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ் உரையாற்றும் போது.

"நீண்ட கால அழிவுகளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகிய எமது இனம் மற்றும் பிரதேசம் மீண்டும்புத்துயிர்ப்பு பெற்று வளர்ச்சி அடைந்து வருகின்றது.

எமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் சனசமூக நிலையங்கள் முழுமையாகத் திட்டமிட்ட வகையில் செயற்பட வேண்டும். எமது பிரதேசத்தில் எல்லா சனசமூக நிலையங்களும் செயற்படு நிலையில் இல்லை. பெரும்பாலான சன்சமூக நிலையங்கள் உறங்கு நிலையில் உள்ளன.

கலாநிதி சனசமூக நிலையத்தின் செயற்பாடு ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியானது. 70ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வைக் கொண்டாடும் அதே நேரம் இளைஞர்கள் தாமாக முன்வந்து அபிவிருத்திக்கு ஆக்க பூர்வமான பங்களிப்பை நல்கி வருவது பாராட்டுக்குரியது. அபிவிருத்தி என்பது வெறும் கட்டுமானங்கள், வீதிச் சீரமைப்புக்கள் மட்டுமல்ல கலை, கலாசாரம் வளர்ச்சியும் அபிவிருத்தியும் இதற்குள் உள்ளடங்கும். சனசமூக நிலையங்கள் உயிர்ப்பு நிலையில் ஜனநாயக பண்பு சார் நிலையில் தொழிற்படும்போது சனசமூகம் சார்நிலையில் உள்ள கிராமம் வளர்ச்சி அடையும். எனவே இளைஞர்கள் முன்வந்து சனசமூக நிலையங்களைப் பொறுப்பேற்று உரியமுறையில் அவற்றை செயற்படுத்தவேண்டும்" எனக் கூறினார். (ஜ-11)

## சோதனைச் சாவடி அகற்றப்பட்டது

மன்னார், மே 30
மன்னார் பூவரசன் குளம் இராணுவச் சாவடி அகற்றப்பட்டுள்ளது.
உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பின் வவுனியா மன்னார் வீதியில் முதன்மைச் சோதனைச்சாவடிகளில் ஒன்றாக பூவரசன் குளம் இராணுவ சோதனைச் சாவடி காணப்பட்டது.
இந்த நிலையில் இந்தச் சாவடி தற்போது நீக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, மன்னாரிலிருந்து வவுனியா செல்லும் வழியில் பறயனாலங்குளம் மற்றும் பம்பைமடுச் சந்தி முதன்மைச் சோதனைச்சாவடிகளாக இயங்கி வருகின்றன. (ஐ-213)

## சந்தேகம்!

வவுனியா, மே 30
வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 'வவுனியா வரவேற்கின்றது' என்று எழுதப்பட்டுள்ள வளைவுக்கு அருகில், ஒரு வாரத்துக்கு முன்னர் படையினரால் அமைக்கப்பட்ட வளைவில் படையினரைச் சித்தரித்தும் தனிச் சிங்கள மொழியில் எழுதப்பட்டும் சிமெந்து போட்டு அமைக்கப்பட்டுள்ளது. இது பொசன் பண்டிகை நிறைவடைந்தும் அகற்றப்படாதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்று அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த விடயத்தை மக்கள் பிரதிநிதிகள் கவனத்திற்கொள்ளவில்லை என்று அங்குள்ள மக்கள் குற்றச்சாட்டுகின்றனர்.
கண்டி வீதிவழியாக வவுனியாவுக்கு வருபவர்களை வரவேற்கும் முதன்மை வளைவு வவுனியா நகருக்குட்பட்ட மூன்றுமுறிப்பு பகுதியில் நிரந்தரமாக நீண்டகாலமாக அமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து சில அடி தள்ளி கம்பியால் வளைவு செய்யப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.
ஓர் இனத்தின் மீது ஆக்கிரமிப்புத் தன்மையை வெளிக்காட்டியுள்ள இந்த விடயத்தை வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் வாதிகள் பிரதேச சபை உறுப்பினர்கள் எவரும் வாய் திறந்து தட்டிக்கேட்கவில்லை என்றும் அங்குள்ள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
இந்த விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வன்னியைப் பாதுகாக்க வேண்டும் என்றும் மக்கள் கோரி வருகின்றனர். (த)





யானைகளால் நாசமாகிய பயிர்கள்....

# தென்னைகள், வாழைகளை யானைகள் நாசமாக்கின

## முல்லையில் தொடர்கிறது தொல்லை

முல்லைத்தீவு, மே 30
முல்லைத்தீவு விசுவமடு மாணிக்கபுரம் கிராமத்துக்குள் புகுந்த 3 யானைகள் தென்னைகள், வாழைகளை நாசமாக்கின. வீட்டிலிருந்தவர்களையும் அச்சுறுத்தின. அவற்றை உழவியந்திரம் மூலமாக மக்கள் துரத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 9 மணி அளவில் இடம்பெற்றது.
4 பேரின் காணிக்குள் புகுந்த யானைகள் பயிர்களை அழித்துவிட்டுச் சென்றன. பல மாதங்கள் கடந்த தென்னங்கன்றுகளையும் சில மாதங்களேயான வாழைகளையும் அவை நாசமாக்கிவிட்டுச் சென்றுள்ளன.
காணிகளிலிருந்தவர்களைத் தாக்கும் வகையில் வீறாப்பாகவே யானைகள் நடந்துகொண்டன. அவற்றிலிருந்து பாதுகாப்பாக விலகியிருந்தனர். உழவு இயந்திரம் மூலமாகவே யானைகளை வீட்டுக் காணிக்குள் இருந்து துரத்த முடிந்தது என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.
"தென்னங்கன்றுகளை நட்டு வாராந்தம் தண்ணீர் இறைத்து வளர்த்து வருகிறார்கள். தவிர ஒவ்வொரு தென்னங்கன்றுகளுக்கும் ஆழக் கிடங்கு வெட்டி குப்பைகள் போட்டு உடலை வருத்தி வளர்த்து வரும் நிலையில் காட்டு யானைகள் வந்து சில நிமிடங்களில் அவற்றைத் துவம்சம் செய்துவிட்டுச் சென்றுவிட்டன.
இது ஒன்றும் புதிதல்ல. பலவருடங்களாக யானைகளின் உபத்திரவங்களை எதிர்கொண்டுவருகின்றோம்" என்று அங்குள்ளவர்கள் கவலை தெரிவித்தனர்.
யானைகளின் பிரச்சினை முல்லைத்தீவில் மட்டுமன்றி கிளிநொச்சி, வவுனியா, மன்னாரிலும் நீடித்துக்கொண்டே இருக்கின்றது. யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து நாசம் விளைவிப்பதைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கை போதுமானதாக இல்லை. தமிழர் வசிக்கும் பகுதிகளில் யானைகளின் தொல்லை மிக அதிகம். அதிகாரிகளிடம் எத்தனையோ தடவைகள் கூறியும் தமது பகுதிகளுக்கு யானை வேலி அமைக்கப்படவில்லை. உரிய அதிகாரிகள் இனியாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். யானை வேலி அமைக்க ஒதுக்கப்படும் நிதி போதுமானதாகவில்லை என்று வனஜீவராசிகள் திணைக்களத்தி னர் காரணம் கூறுகின்ற னர். ஆனால் ஒதுக்கப்படும் சிறிய நிதியில்கூட தமது பகுதிகளில் யானை வேலி எங்குமே அமைக்கப்படவில்லை. இந்த விடயத்திலும் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-222)

# விடுதித் தொழிலாளி தூக்கில் சடலமாக மீட்பு

## முதலாளிக்கு நீதிமன்று எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 30
விடுதியில் தொழிலாளி தூக்கில் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அந்த விடுதியின் உரிமையாளர் பொறுப்பற்ற வகையில் நடந்துகொண்டார் என்று யாழ்ப்பாண நீதிவான் மன்று அதிருப்தி தெரிவித்ததோடு, அவரைக் கடுமையாக எச்சரித்தது.
யாழ்ப்பாணம், பரமேஸ்வராச் சந்தி சிவன் அம்மன் கோவில் வீதியில் விடுதி உள்ளது. அதன் கிளை ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அண்மித்துள்ளது. அங்கு தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த இளைஞன் சடலமாகக் கடந்த திங்கட் கிழமை மீட்கப்பட்டார்.
ஹற்றனைச் சேர்ந்த ரி. சிந்துஜயந்த் (வயது - 23) என்பவரே சடலமாக மீட்கப் பட்டார். சம்பவம் தொடர்பில் அன்று பின்னிரவு யாழ்ப்பாண நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் சம்பவ இடத்துக்குச் சென்று இறப்பு விசாரணை நடத்தினார்.
பணியாளர் ஒருவர் விடுதிக்குள் தற்கொலை செய்துகொண்டமை தொடர்பில் விடுதியின் உரிமையாளர் பொலிஸ் அவசர இலக்கத்துக்கு மாத்திரம் அறிவித்துவிட்டு இருந்துவிட்டார். பொலிஸ் நிலையத்துக்கு உரிய அறிவித்தலை வழங்கவில்லை என்று சம்பவ இடத்தில் நடந்த விசாரணையின் போது நீதிவானிடம் பொலிஸார் தெரிவித்தனர்.
அதனால் விடுதி உரிமையாளரை நீதிமன்றில் மறுநாள் முற்படுமாறு உத்தரவிட்டார் நீதிவான். பணியாளரின் சடலத்தை உடற்கூற்று விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கவும் உத்தரவிட்டார். பணியாளர் தொடர்பான இறப்பு விசாரணை யாழ்ப்பாண நீதிவான் நீதி மன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
மன்றில் முற்பட்ட விடுதியின் உரிமையாளர் மன்றில் வாக்குமூலம் வழங்கினார்.
"தற்கொலை செய்துகொண்ட பணியாளர் 5 ஆண்டுகளாக எனது விடுதியில் பணியாற்றுகின்றார். அவரைப் பிள்ளை போன்றே வளர்த்தேன். அதனால்தான் அவரின் முடிவை ஏற்க முடியாது சடலத்தைப் பார்வையிட வரவில்லை. எனது வங்கி அட்டையை எடுத்து பணம் செலவிட்டமை தொடர்பில் கண்டித்ததை அடுத்தே அவர் இந்த முடிவுக்கு வந்திருப்பார் என நினைக்கின்றேன்" என்று விடுதியின் உரிமையாளர் மன்றில் வாக்குமூலம் வழங்கினார்.
"உமது பணியாளர் ஒருவர் விடுதிக்குள் பிணமாகக் கிடக்கின்றார். முதலாளியான நீர் சடலத்தைக் கூடப் பார்க்கச் செல்லவில்லை, என்ன மனிதாபிமானம் இது? தொழிலாளர்கள் மீது முதலாளிக்கு அக்கறை அவசியம்! உயிரிழந்தவர் 5 ஆண்டுகளாகப் பணியாற்றினார் என்றும் பிள்ளை போல் பார்த்ததாகவும் கூறுகின்றீர். அவர் தற்கொலை செய்தமை தொடர்பில் பொலிஸாருக்கு உரிய அறிவித்தல் வழங்காமல் அசண்டையீனமாகச் செயற்பட்டுள்ளீர். இவ்வாறு செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது மனிதாபிமானமற்றது" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முதலாளியைக் கண்டித்தார்.
இறப்பில் சந்தேகம் உள்ளதாக இறந்த இளைஞனின் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.
இளைஞனின் கைப்பட எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றும் மீட்கப்பட் டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உடலில் காயங்கள் காணப்படவில்லை என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-37)



# வங்கியில் வேலை தருவதாக 4 லட்சத்துக்கும்மேல் மோசடி

## கவனமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

அரச வங்கியில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பல இலட்சம் ரூபா பணம் மோசடி செய்த நபர் தொடர்பில் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அது தொடர்பில் விழிப்பாக இருக்குமாறும் யாழ்ப்பாணப் பொலிஸார் மக்களைக் கோரியுள்ளனர். வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக எட்டுப் பேருக்கு மேற்பட்டோரை ஏமாற்றிப் பண மோசடி செய்த நபர் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
ஏமாற்றமடைந்தவர்கள் அது தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொண்டால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாநகர சபையில் பணியாற்றும் ஒருவர் அரச வங்கியில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 4 இலட்சம் ரூபா தொடக்கம் 6 இலட்சம் ரூபா வரை பெற்றிருந்தார்.
கடந்த 18ஆம் திகதி கொழும்புக்கு அழைக்கப்பட்டு 17ஆம் திகதியி டப்பட்ட நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அன்று தொடக்கம் நீங்கள் வங்கியில் பணியாளராக இணைந்துள்ளீர்கள் என்றும் கூறினார்.
நாங்களும் அதனை நம்பி மறுநாள் எமது நியமன கடிதத்தில் குறிப்பி டப்பட்டிருந்த அரச வங்கியின் கிளைக்கு நியமனக் கடிதத்துடன் பணிக்குச் சென்றோம்.
எமது கடிதத்தை பார்த்த வங்கி முகாமையாளர் இது தமது வங்கியின் நியமனக் கடிதம் இல்லை. இது போலியானது எனவும் கூறினார்.
எமக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வாங்கிய நபருடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்தபோது "தனக்கு அது பற்றித் தெரியாது. தமக்கு வேறு நபர் வேலை வாய்ப்பு இருப்பதாகக் கூறியதனாலேயே அவரிடமே உங்களை அழைத்து சென்றேன். அவரிடம் தான் அது தொடர்பில் கேட்க வேண்டும்" என்று கூறி தொடர்பைத் துண்டித்துள்ளார். பின்னர் அவரது தொலைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். (த-37)

## மைதானத்துக்கு சுற்றுமதில் அமைப்பு

அளடிவட்டி, மே 30
அளவெட்டி தெற்கு கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்துக்கு சுற்றுமதில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம எழுச்சித் திட்ட நிதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவால் ரூபா 10 லட்சம் விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கப்பட்டது. இந்த நிதி மூலம் சுற்றுமதில் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-63)


# நகரசபை பொதுச் சந்தையை குத்தகைக்கு விடவேண்டாம்

## *சாவகச்சேரி சந்தை வியாபாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம்*

*சாவகச்சேரி மே. 30*

**சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தையைக் குத்தகைக்கு விட வேண்டாமென வலியுறுத்தி சந்தை வியாபாரிகள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**





இதனால் சந்தை மூடப்பட்டு வெறிச் சோடிக் காணப்பட்டது. போராட்டத்துக்கு நகரப் பகுதி வர்த்தகர்களும் ஆதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்களை மூடியி ருந்தனர். போராட்டம் தொடர்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தை வியாபாரிகள் முன்னறிவித்தல்களை வழங்கியிருந்ததால் உற்பத்தியாளர்களும் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு வரவில்லை.இதனால் சந்தை சன நடமாட்டமின்றிக் காணப்பட்டது.

சந்தை முன்பாக ஒன்றுகூடிய வியாபாரிகள் பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக நகரசபை முன்பாகச் சென்று கோரிக்கை அடங்கிய மனுவை தவிசாளரிடம் கையளித்தனர்.

தமது போராட்டம் தொடர்பாகச் சந்தை வியாபாரிகள் தெரிவித்ததாவது;

கடந்த 16ஆம் திகதி நகரசபை அமர்வில் சாவகச்சேரிப் பொதுச் சந்தையை ஜூலை முதலாம் திகதி தொடக்கம் குத்தகைக்கு விட முடிவு செய்து அது தொடர்பான கேள்வியும் கோரப்பட்டது.

நீண்ட காலமாகச் சந்தையை நகர சபை நிர்வகித்தபோது நட்டமேற்படவில்லை தற்போதைய ஆட்சியினர் நட்டம் ஏற்பட்டது போன்று மாயையை உருவாக்கிசந்தையைக் குத்தகைக்கு விட முயல்வது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏற்கனவே சந்தை குத்தகைக்கு விட்டபோது தனிநபரின் செயற்பாட்டினால் சந்தையிலிருந்து பெருமளவு வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் சந்தையைவிட்டு வெளியேறினர். இன்று வரை அவர்கள் சந்தைக்குத் திரும்பி வரவில்லை. தற்போது வந்துள்ள சபையினரை விட சந்தையின் செயற்பாடுகளை நாம் நன்கு அறிவோம். தமது நலனுக்காகத் தவிசாளர், உப தவிசாளர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் சர்வ அதிகாரம் கொண்ட உறுப்பினர் என்ற வகையில் எம்முடன் நடந்து கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாதது. அத்துடன் சந்தையைக் குத்தகைக்கு விடுவதால் பாதிப்பு வியாபாரிகளாகிய எங்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்குமே தவிர நகரசபைக்கு அல்ல.

சந்தையைக் குத்தகைக்கு விட வேண்டாமெனவும் சந்தையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறும் வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம் நடத்தவுள்ளோம் என முன்னறிவித்தல் வழங்கியிருந்த போதிலும் நகர சபை ஆட்சியாளர்களோ உறுப்பினர்களோ எம்முடன் அது குறித்துக் கலந்துரையாடவில்லை. .

சந்தையை அபிவிருத்தி செய்யவே உறுப்பினர்களுக்கு நாம் வாக்குகளை வழங்கியிருந்தோம். தாங்கள் நினைத்தபடி எம்மை ஆள்வதற்கு அல்ல. எனவே சந்தையைக் குத்தகைக்குவிடுவதை உடனடியாக நிறுத்த் வேண்டும். சந்தை குத்தகைக்கு விடப்பட்டால் இங்குள்ள வியாபாரிகள் அனைவரும் வேறு சந்தைகளுக்குச் சென்றுவிடுவோம் என்றும் தெரிவித்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு சாவகச்சேரி வணிகர் மன்றமும் தனது முழு ஆதரவைத் தெரிவித்திருந்தது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கக்கூடாது என்று மிரட்டும் தொனியில் அரசியல்வாதி ஒருவர் மன்றப் பிரதிநிதிக ளு டன் பேசினார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட நிலையிலும் வணிகர் மன்றத்துக்குட்பட்ட அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. (ஐ-9)

---

## அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம்

அளவெட்டி,மே 30

யாழ்ப்பாணம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அபிவிருத்திசங்க பொதுக்கூட்டம் பாடசாலையில்இன்றுவியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். எனவே பெற்றோர்கள்,பழைய மாணவர்கள்.நலன்விரும்பிகள் அனைவரையும்.கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் எஸ்.கணேசானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ-63)

## கோப்பாய் ஓய்வூதியர் சகாயநிதிச் சங்கம் முதலிடம்

அச்சுவேலி மே.30

மாவட்ட நிலையில் கோப்பாய் பிரதேசசெயலக பிரிவு ஓய்வூதியர் சகாய நிதியச் சங்கம் முத்லாம் இடத்தைப் பெற்றுள்ளது.

பிரதேச செயலக பிரிவு வாரியாக செயற்பட்டுவரும் அரச சேவை ஓய்வூதியர் சகாய நிதியச் சங்கங்கள் மத்தியில் அவற்றின் செயற்பாடுகள் மற்றும் உறுப்பினர்களுக்கு ஆற்றிவரும் பணிகள் என்பனவற்றைஉள்ளடக்கியநிலையில் மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டன. மேற்படி மதிப்பீட்டு செயற்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட நிலையில் தெரிவு செய்யப்பட்ட குழுவால் மேற்கொள்ளப்பட்டன.

2018ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளின் படி பிரதேச செயலக பிரிவு சங்கங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் விவரங்க்ள் வருமாறு:

100 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட சங்கங்கள் இடையே மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவுச் சங்கம் 74 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், சண்டிலிப்பாய் பிரிவுச் சங்கம் 71 புள்ளி களைப் பெற்று இரண்டாம் இடத்தையும்,சங்கானை பிரிவுச் சங்கம் 61 புள்ளி களைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

100 அங்கத்தவர்களுக்கு குறைவான உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்கள் இடையே நடைபெற்ற மதிப்பீட்டில் வேலணை பிரிவுச் சங்கம் 24 அரைப் புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், ஊர்காவற்றுறை பிரிவுச் சங்கம் 20 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், நெடுந்தீவு பிரிவுச் சங்கம் 18 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

வெற்றி பெற்ற சங்கங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட சங்கப் பொதுக் கூட்டத்தில் வைத்து விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ஐ-11)

---

## வேலை தேடும் இளையோர் பதிவுசெய்யவும்

பளை,மே 30

பளைப் பிரதே சத்துக்குட்பட்ட வேலை தேடும் இளையோருக்கான பதிவுகள் ஜீன் 3 ஆம் திகதி தொடக்கம் 7 ஆந் திகதி வரை பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் பட்டதாரிகள், க.பொ.த உயர்தரம், சாதாரண தரம் சித்தி பெற்றவர்கள் க.பொ.த சாதாரண தரத்தை நிறைவு செய்யாதவர்கள் மற்றும் தொழிற் கல்வியை நிறைவு செய்தோர் பதிவு செய்யமுடியும் என்று பிரதேச செயலர் திருமதி.ப.ஜெயராணி அறிவித்துள்ளார். (ஐ-9)

---

### சுகாதாரப் பகுதியினரால்

# மருந்து விசிறியதாகத் தெரிவித்து ஒரு தொகை பழங்கள் அழிப்பு

பருத்தித்துறை, மே 30

நேரடியாக மருந்து விசிறி பழுக்க வைக்கப்பட்ட பழவகைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டது எனத் தெரிவித்து அதனைக் கைப்பற்றிய சுகாதாரப் பகுதியினர் அழித்துள்ளனர்.

இது தொடர்பில் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, புலோலி மற்றும் கற்கோவளம் பகுதிகளில் இருந்தே இந்தப் பழங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



பொதுமக்கள் கொடுத்த முறைப் பாட்டினையடுத்து பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகதாரப் பரிசோதகர்கள் குறித்த பகுதிகளில் கடந்த சனிக்கிழமை சோதனை மேற்கொண்டனர். இதன்போது மருந்து விசிறப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பழவகைகள் கைப்பற்றப்பட்டு வியாபாரிகளின் ஒப்புதலுடன் அழிக்கப்பட்டது.


அத்துடன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதும் சுட்டுத் துண்டு விதிமுறைகளை மீறும் வகையில் விற்பனைக்கு வைத்திருந்த இனிப்பு வகைகள் நச்சு இரசாயனப பொருள்களுடன் சேர்த்து களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த உணவு வகைகள் பூஞ்சணம் பிடித்த, பூச்சிகள் மொய்த்த நிலையில் காணப்பட்ட உணவுப் பண்டங்கள் மற்றும் பழவகைகள் போன்றவற்றைக் கைப்பற்றி அழித்ததுடன் அவற்றினை வைத்திருந்த வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ஐ-9)

# பாதுகாப்புக் கொள்கை திடமானதாக இல்லை

## இராணுவத் தளபதி வேதனை

கொழும்பு, மே 30

உறுதியான பாதுகாப்பு கொள்கைகள் நாட்டில் இல்லாதமையே பயங்கரவாதிகளும் அடிப்படைவாதிகளும் தோற்றம் பெறுவதற்கு காரணமென இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு சுதந்திரமடைந்து 70 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்னும் வலுவான பாதுகாப்புக் கொள்கையொன்றை தயாரித்துக் கொள்ள முடியவில்லை.

நாட்டின் பாதுகாப்பு வலிமையற்று காணப்பட்டிருந்தமையால்தான் பயங்கரவாதிகள் குண்டுகளைத் தயாரித்து, தாக்குதலை நடத்துவதற்கு இலகுவாக அமைந்தது.

தாக்குதலை நடத்தியவர்கள் முஸ்லிம் பயங்கரவாதிகள் என்பதனால், அனைத்து முஸ்லிம் மக்களையும் சந்தேக கண்ணோட்டத்தில் பார்ப்பது முறையல்ல. அந்த மக்களின் உணர்வுகளை ஏனைய இன மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஒ.5)

## வீதி விபத்தில் சிறுவன் காயம்

முச்சக்கரவண்டிமோதியதில் காயமடைந்த சிறுவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் மீசாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த விபத்தில் சஜீவன் பிருந்தன் (வயது - 6) என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வீதி வளைவில் திரும்பிய முச்சக்கரவண்டி அவ்வழியே நடந்து வந்த சிறுவனை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

## இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மே 30

நல்லூர் பிரதேச செயலகத்தால் முதியோர்களுக்கான இலவச ஆயுள்வேத சிகிச்சை மருத்துவமுகாம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் உள்ள ஜே / 114கிராம அலுவலர் அலுவலகத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## நாளை தொடக்கம் நாய்களுக்கு தடுப்பூசி

கொடிகாமம், மே 30

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட அனைத்துக் கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் நாய்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இன்று எழுதுமட்டுவாழ் வடக்கு தெற்கு பிரிவுகளிலும், எதிர்வரும் 3 ஆம் திகதி மிருசுவில் வடக்கு தெற்கு ஆகிய பிரிவுகளிலும், 4 ஆம் திகதி உசன் கரம்பகம் பிரிவிலும்,

6 ஆம் திகதி விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய பிரிவுகளிலும், 7 ஆம் திகதி கொடிகாமம் தெற்கிலும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை விலங்கு விசர் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளன.

இலங்கையில் வருடந்தோறும் 20 க்கும் அதிகமானோர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழப்பதற்கு நாய்களிலிருந்து ஏற்படும் ரேபிஸ் வைரஸ் தொற்றே முதன்மைக் காரணமாகும். இதனைத் தடுப்பதற்கு வீட்டிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். பி தடுப்பூசி ஏற்றுவது கட்டாயமாகும்

பொது மக்கள் வீடுகளில் வளர்க்கும் நாய்களுக்கு நோய் வராமல் தடுப்பூசி கட்டாயம் ஏற்ற வேண்டும்.

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றாமல் வைத்திருப்போருக்கு மற்றும் விசர் நோய் தடுப்பூசி ஏற்றாமல் வைத்திருக்கும் நாய்கள் பொது மக்களுக்கு கடிக்குமாக இருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ. குணசாந்தன் அறிவித்தார்

விசர் நாய் தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் குறித்த நாளன்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-159)

## இரகசியக் கருத்தடை விசாரணையை மருத்துவ சபையிடம் கையளியுங்கள்

### அமைச்சர் சம்பிக்க கோரிக்கை

நிரந்தரக் கருத்தடைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் குருநாகல் மருத்துவமனை மருத்துவரிடம் அறிவியல் ரீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். எனவே இந்த விசாரணையை மருத்துவ சபையிடம் ஒப்படைப்பதே பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநாகல் மருத்துவர் தொடர்பில் எழுந்துள்ள சந்தேகத்தை உடனடியாகத் தீர்க்கவில்லை என்றால் எதிர்காலத்தில் அனைத்து மருத்துவர்களையும் சந்தேகக் கண்ணோட்டத்திலேயே மக்கள் பார்ப்பார்கள்.

தற்போதுள்ள சூழ்நிலையில் மருத்துவர் சாபிக்கு எதிராக முன்வைக் கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் பொறுப்பை மருத்துவ சபையிடம் ஒப்படைப்பதே சிறந்ததாகும்.

சத்திரசிகிச்சையை தனியொரு மருத்துவரால் மேற்கொள்ள முடியா தென்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சத்திரசிகிச்சையொன்றை மேற்கொள்ளும்போது மேலதிக மருத்துவர்கள் மற்றும் தாதிமார் நிச்சயம் இருப்பார்கள். இவ்விடயத்தில் உண்மையை கண்டறிவது மிகவும் அவசியமாகவுள்ளது. இங்கு அறிவியல் ரீதியிலான விசாரணையே தேவைப்படுகின்றது. இதனால் மருத்துவ சபையிடம் ஒப்படைப்பதே நல்லது. மருத்துவ சபையினுடைய விசாரணையின் முடிவில் மருத்துவர் சாபி குற்றம் செய்தமை உறுதிப்படுத்தப்பட்டால் கடுமையான தண்டனையை வழங்க வேண்டும் - என்றார். (ஒ.5)

## மகிந்தவின் பாதுகாப்பில் ரணில் காட்டும் அக்கறை

### புதிய குண்டு துளைக்காத கார் வாங்கிக் கொடுக்கவுள்ளார்

கொழும்பு, மே 30

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு குண்டு துளைக்காத வாகனத்தை வாங்குவதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார். இந்த யோசனைக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு குண்டு துளைக்காத வாகனத்தைப் புதிதாகக் கொள்வனவு செய்யும் அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தார். இதற்கு அமைச்சர் மங்களவைத் தவிர ஏனையோர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது. (ஒ.5)

## காற்றாலை அமைக்கும் இடத்தில் வீதி வேலைகளை நிறுத்துங்கள்

### தென்மராட்சிப் பிரதேச செயலர் உத்தரவு

சாவகச்சேரி, மே 30

மறவன்புலவில் காற்றாலை அமைக்கும் இடத்தில் அனுமதியின்றி அமைக்கப்படும் வீதி வேலைகளை உடனடியாக நிறுத்துமாறு பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு உத்தரவிட்டுள்ளார்.

**பொதுமக்களின் எதிர்ப்பின்றி வேலைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதால் தற்போது வீதி வேலைகள் மேற்கொள்வதை நிறுத்துமாறு பிரதேச செயலர் உத்தரவிட்டுள்ளார்.**

காற்றாலை அமைப்பதால் அந்தப் பகுதிக்குப் பாதிப்பு ஏற்படலாமென்று கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதி மக்கள் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் ஆரம்பித்து காற்றாலை அமைக்கும் பகுதி வரை ஊர்வலமாகச் சென்று அங்கு வேலைகள் நடைபெறுவதைத் தடுத்தனர். இதனால் காற்றாலை அமைக்கும் நிறுவனத்தினர் பொலிஸாருக்கு முறை யிட்டனர். பொலிஸார் அங்கு வந்து இரு தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் மறுநாள் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மூலம் தீர்வு காண்பதாக தெரிவித்ததையடுத்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

மறுநாள் அந்தப் பகுதி மக்களும் காற்றாலை நிறுவனத்தினரும் பிரதேச செயலகத்துக்கு வருகை தந்திருந்த போதிலும் பொலிஸார் வருகை தராததால் கூட்டம் நேற்று நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று இரு தரப்பினரும் பொலிஸார், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன், பிரதேச செயலருடன் கலந்துரையாடினர். பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றில் அனுமதி பெறாமல் வீதி அமைக்கக்கூடாது எனவும் அவ்வாறு அனுமதி பெற்ற பின்னர் பொதுமக்களின் எதிர்ப்பின்றி வேலைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதால் தற்போது வீதி வேலைகள் மேற்கொள்வதை நிறுத்துமாறு பிரதேச செயலர் உத்தரவிட்டுள்ளார். (து-9)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 30

காரைநகர் நெய்தல் அன்னை கலா மன்றம் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் உயிரிழந்த மக்களுக்காக அஞ்சலி நிகழ்வு ஒன்றை நடத்தியது.

மன்ற நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கத் தலைவர் செ. செல்வகுமார் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி அஞ்சலி நிகழ்வில் மன்றக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடபட்டது. அத்துடன் இறந்தவர்களுக்கான ஆத்ம சாந்திக்காக ஈகைச்சுடர் மற்றும் மெழுகுவர்த்தி ஏத்தி வழிபாடு செய்தலுடன் ஒருநிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் அன்னை கலாமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீ வீரநாக காளியம்மன் ஆலய அறங்காவலர்கள், நெய்தல் பிரதேச மக்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (ஐ)

# மீன்பிடி குறைந்துவரும் அதேநேரம் கடலுணவுக்கான கேள்வி அதிகரிப்பு

## இப்போதிருந்தே உரிய நடவடிக்கை வேண்டுமென்று நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை தெரிவிப்பு

மூதூர், மே 30

உலகளாவிய ரீதியில் மீன்பிடி குறைந்து வருகின்ற அதேநேரத்தில் கடலுணவுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் நமது மீனவர்களைத் தயார்ப் படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.



இவ்வாறு நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவிப்பணிப்பாளர் எஸ்.ரவிக்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கரையோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்திக்கான சாத்தியங்கள் தொடர்பில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் செயலமர்வு நடைபெற்றது.

திருகோண மலை மாவட்டத்தில் கடலுணவு உற்பத்தித் துறையை மேம்படுத்தல் தொடர்பில் பல்வேறு விடயங்கள் அங்கு கலந்துரையாடப்பட்டன, விளக்கங்களும் வழங்கப்பட்டன.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு பட்ட கடல்வாழ், கரையோரம் வாழ் உயிரினங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. நீர் வாழ் உயிரின வளர்ப்புத் திட்டங்கள் ஊடாக அவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடுநம் அனைவருக்கும் உண்டு. 2013 முதல் 2015 காலப்பகுதியில் 50க்கு 50 என்ற அளவில் இருந்த மீனுக்கான தேவையும் மீன் பிடியும் 2025இல் 57க்கு 43 என்ற விகிதத்தை அடையும். அவ்வாறான நிலையில் மீன் வளர்ப்பை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. இல்லையானால் பெரும் நெருக்கடியொன்றை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

சூழல் நேயமிக்க வகையில் இறால், நண்டு, கடலட்டை, கவ்வாட்டி, கடல் பாசி, மீன் வகைகள் என இந்த கடலுணவு உற்பத்தித்துறை சுற்று லாத்துறையையும் இணைத்ததாக மேற்கொள்ளப்படவேண்டும்.

பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதன் ஊடாகவும், வேலைவாய்ப்புக்கள் நிச்சயிக்கப்படுகின்றமை எமது அதிகார சபையின் ஊடாக உருவாக்கப்படுகிறது.

அதே நேரத்தில் உள்ளூர் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருளியல் பல்வகைமை உருவாவதற்கான சூழல் ஏற்படுத்தப்படுவதன் மூலமாக சிறந்ததொரு தொழில்துறையாக கடலுணவு உற்பத்தி எதிர்காலத்தில் மாறும்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கரையோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்திக்கான சாத்தியங்கள் குறித்தான திட்டமிடலைச் சரியான முறையில் மேற்கொள்வதன் மூலம் சாதாரண மக்களை தொழில் முயற்சியாளர்களாக உருவாக்குவதுடன், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களிக்கச் செய்யமுடியும் என்று மேலும் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில், திருகோணமலை மாவட்டத்தில் இந்தத்திட்டம் பிரதேச செயலக ரீதியாக முன்னெடுப்பது பற்றி ஆராயப்பட்டது. தொடர்ச்சியான வேலைத்திட்டத்துக்கான பிரதேச செயலர்கள், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் அடங்கிய ஒரு செயற்பாட்டுக்குழுவும் ஏற்படுத்தப்பட்டது. (த-40)

---

க.பொ.த. உயர்தர, சாதாரண தர

# பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களை இனி தபால் நிலையங்களில் பெறலாம்

## கொழும்பு சென்று அலைவதை தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே 30

க.பொ.த உயர் தர, சாதாரண தர பெறுபேற்றுச் சான்றிதழ்களை அடுத்த மாதம் தொடக்கம் முதன்மைத்தபால்நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

க.பொ.த உயர் தர, சாதாரண தர பெறுபேற்று சான்றிதழ்களை பல்வேறு தேவையின் நிமித்தம் பெற்று கொள்வதற்கு பலர் கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத்துக்கு நாள்களைச் செலவிட்டு வந்து செல்கின்றனர். சுமார் 2 ஆயிரம் பேர் இந்தச் சான்றிதழ்களை பெறுவதற்கு நாளொன்றுக்கு வந்து செல்கின்றனர். ஆகவே இதனை இலகு படுத்துவதற்காக எதிர்வரும் ஜூன் ஆறாம் திகதி தொடக்கம் நாட்டிலுள்ள முதன்மைத் தபாலகங்களில் குறித்த சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதன்மைத் தபாலகங்களில் இந்தச் சான்றிதழ்களைப்பெறுவதற்கான கணினி வலையமைப்பு பரீட்சைகள் திணைக்களத்துடன் ஏற்படுத்தப்படவுள்ளது. சான்றிதழ்கள் தேவைப்படுவோர் அதற்கான தகவல்களை வழங்கி தபால் நிலையத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-7)

---

# கத்தியால் குத்தினாரென கைதானவருக்கு மறியல்

சாவகச்சேரி, மே 30

காணியில் கட்டப்பட்டிருந்த மாடுகளை அவிழ்த்துவரச் சென்றவரை கத்தியால் குத்திக் காயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கெற்பேலி மேற்கில் கடந்த 26 ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றது.

தகப்பனைப் பின் தொடர்ந்து சிறிது தூரத்தில் சென்றுகொண்டிருந்த மகள், தந்தை கத்தியால் குத்தப்பட்டதைக் கண்டு சத்தமிட சந்தேகநபர் தப்பியோடியுள்ளார்.

தோள் பகுதியில் குத்தப்பட்ட கத்தியை மகள் இழுத்து எடுத்ததுடன் தகப்பனை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் கந்தசாமி (வயது. 55) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மகள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து, கத்தியால் குத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபரைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்து கடந்த திங்கட் கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

(த-9)

---




# தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தால் மாணவர்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள்!

யாழ்ப்பாணம், மே 30

தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தால் பல மாணவர்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் லக்ஷ்மி நாராயணன் திருமண மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உந்துருளிகள், சீருடைக்கான துணிகள், காலணிகள், பாடசாலை உபகரணங்கள் என சுமார் 2 லட்சம் பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.



தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தால் ஒவ்வொரு மாதமும் இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

---

## வைகாசிப் பொங்கல்

யாழ்ப்பாணம்,மே 30

கொழும்புத்துறை வில்வையடி சிறி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் நாளை வெள்ளிக்கிழமை இரவு நடைபெறும்.

அன்றைய தினம் முற்பகல் 9 மணிக்கு சிறப்பு பூசைகள் அபிசேகம் இடம்பெற்று இரவு பொங்கல் இடம்பெறும். பூமிதித்தல் நிகழ்வும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

---

உரிய தீர்வு வழங்கக்கோரி

# கோவில் முன்பாக நேற்றும் போராட்டம்

மருதங்கேணி, மே 30

தென்மராட்சி வரணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டம் நடைபெற்றது.

ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டும் ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் ஆரம்பித்த போராட்டமே நேற்றும் தொடர்ந்தது.

கடந்த வருடம் இந்த ஆலயத்தில் தேர் உற்சவத்தின் போது பிற சமூகங்கள் தேர் வடம் பிடிக்க கூடாது என்று தெரிவித்து ஜேசீபி கனரக வாகனம் மூலம் தேர் இழுக்கப்பட்டது.

கடந்த 20ஆம் திகதி இடம் பெற வேண்டிய திருவிழா திட்டமிட்டு நிறுத்தப்பட்டது என்று கூறும் பாதிக்கப்பட்ட மக்கள், உரிய தீர்வுகோரி இரண்டாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று சுமார் 50 பேர்வரை கலந்து கொண்டுள்ளனர். கொடிகாமம் பொலிஸார் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

இதுவரை சாவகச்சேரி பிரதேச செயலகமோ, மாவட்டச் செயலகமோ, இந்து கலாசாரத் திணைக்களமோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று போராட்டத்திலுள்ள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

(த-160)

# நிதி அமைச்சின் ஊடகப் பிரிவு பணிப்பாளர் நேற்று திடீர் கைது

## துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன என்கிறது பொலிஸ்

கொழும்பு, மே 30
நிதி அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் மொஹமட் அலி ஹசன் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மல்வானையில் உள்ள அவரது வீட்டில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதாகவும், அதனையடுத்து அவர் சந்தேகத்தில் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட கூட்டு தேடுதல் நடவடிக்கையின் போதே 92 துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ.5)

# இந்திய அரசுடன் பேச்சு நடத்த நாடு கடந்த தமிழீழ அரசு தயார்

## மோடிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் உருத்திரகுமாரன் தெரிவிப்பு



கொழும்பு, மே 30
இலங்கைத்தீவு தொடர்பான இந்திய வெளிநாட்டுக் கொள்கையில், தமிழீழ மக்களுக்குச் சார்பான மாற்றம் அடுத்து அமையும் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சிக்காலத்தில் ஏற்படுமென நம்பிக்கை தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன், இவ்விடயத்தையொட்டி எம்முடன் உரையாடும் விருப்பம் கொண்டால் அதற்கான ஒரு சிறப்பு தூதுக்குழுவை அனுப்பி தங்களது அரசுடன் பேசுவதற்கும் நாங்கள் தயாராக உள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தலைமை அமைச்சராக மீண்டும் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள வாழ்த்துக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவரது வாழ்த்துக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாடு கடந்த தமிழீழ அரசானது, இனவழிப்பில் இருந்து தமிழீழ மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமக்கெனத் தனியரசை அமைக்கும் முயற்சியினை வலுப்படுத்தும் நோக்குடன் செயற்பட்டு வருவதனைத் தாங்கள் அறிந்திருக்கக் கூடும்.
தமிழீழ மக்கள் இந்திய மக்களுடன் வரலாற்றுபூர்வமாக நட்புறவைக் கொண்டவர்கள். எமது மக்கள் இந்த நட்புறவு தொடர வேண்டும் என்பதில் பெருவிருப்பு கொண்டுள்ளார்கள்.
இந்தத் தருணத்தில், இலங்கைத்தீவில் இரு அரசுகள் என்ற தீர்வுத்திட்டம் தமிழீழ மக்களுக்கும் இந்திய நாட்டுக்கும் ஒரு சேரப் பயன்தரக்கூடியது என்பதனை தங்கள்கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.
தமிழீழ தேசம் என்றும் இந்தியாவின் நட்புசக்தியாகவும் இந்தியாவின் பாதுகாப்புக்கு உறுதுணையாகவும் இருக்கும் என்பதனையும் வெளிப் படுத்திக் கொள்கிறோம்.
தங்கள் தலைமையிலான அடுத்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் இலங்கைத்தீவு தொடர்பாக இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் தமிழீழ மக்களுக்குச் சார் பான மாற்றம் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கி றோம்.
தாங்கள் அமைக்க விருக்கும் ஆட்சியானது இவ்விடயத்தையொட்டி எம்முடன் உரையாடும் விருப்பம் கொண்டால் அதற்கான ஒரு சிறப்பு தூதுக்குழுவை அனுப்பி தங்களது அரசுடன் பேசு வதற்கும் நாங்கள் தயாராக உள்ளோம் என்று வாழ்த் துக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

# பயங்கரவாதச் செயலுக்கு அரசு துணைபோய்விட்டது

## ஜே.வி.பியின் பேச்சாளர் ஹேரத் கூறுகிறார்



கொழும்பு, மே 30
பயங்கரவாதச் செயற்பாட்டுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசு துணைபோயுள்ளது. இந்நிலையில் அவர்களைக் காப்பாற்றுவதற்கு மகிந்த அணியினர் முயற்சிக்கின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுந்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொடர் குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு அறிவுறுத்தல் கிடைத்தும் அதனை அரசு கவனத்தில் கொள்ளவில்லை. அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இனவாத தாக்குதலுக்கும் அரசு துணைபோயுள்ளது.
இத்தகைய சந்தர்ப்பங்களில் தலைமை அமைச்சரும் அரசதலைவரும் தமது கடமையை நிறைவேற்றாது இருந்தனர். அதனால் தான் நேரடியாகவோ மறைமுகமாகவோ வன்செயல்களுக்கு அவர்கள் துணைபோயுள்ளனர் என்பது உறுதியாகின்றது.
அரசைக் காப்பாற்ற வேண்டிய தேவை ராஜபக்சவின் எதிர்க்கட்சிகே உள்ளது. ஆகையாலேயே அமைச்சர் ஒருவருக்கு எதிராக மட்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன் வந்துள்ளனர். ஆனால் நாம் அரசுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளோம் - என்றார். (த)

# காத்தான்குடியில் பேரீச்சை அறுவடை

மட்டக்களப்பு, மே 30
காத்தான்குடி பிரதான வீதியில் நடப்பட்ட பேரீச்சை மரங்கள் இந்த வருடமும் பழுத்துள்ளன. இதன் அறுவடை நிகழ்வு காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது. (ஒ.5,7)

# வேரை வெட்டாமல் கையை வெட்டிப் பலன் எதுவுமில்லை

## கூறுகிறார் ஞானசார தேரர்



கொழும்பு, மே 30
நாட்டில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பில் ஒரு சிலர் கைதாகின்றனர். அவர்களின் பின்னால் மிகப் பெரிய வலையமைப்பு இருக்கின்றது. வேரை வெட்டாமல் கையை மட்டும் வெட்டி எந்தப் பயனுமில்லை. பின்னால் உள்ள மிகப் பெரிய வலையமைப்பை கண்டறிவதுடன், அவற்றுக்குப் பணம் வழங்கும் தரப்புகளைக் கைது செய்யவேண்டும். இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சவுதி அரேபிய புலனாய்வுப் பிரிவினர், இலங்கையில் அடிப்படை வாதத்தை நிலைநாட்டவும் அதனை கட்டியெழுப்பவும் பல்வேறு செயற்பாடுகளில் தற்போது ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள், உறுப்பினர்களை அல்லாது தலைவர்களையே உருவாக்குகிறார்கள். 50 அமைப்புக்கள் இவ்வாறு காணப்படுகின்றன. இவைதான் பல்வேறு பெயர்களில் இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு தகவலையே தற்போது வெளியிடவுள்ளேன்.
முஸ்தபா அப்துல் ரஹ்மான், என்பவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். இவர் இலங்கையில் தனியார் கல்வி நிறுவனமொன்றின் உரிமையாளராக இருக்கிறார். இவரை உடனடியாக அரசு கைது செய்ய வேண்டும். இவர் இலங்கையில் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான ஸஹ்ரானுடனும் தொடர்பில் இருந்துள்ளார். இவருக்கு கட்டாரில் ஹோட்டல்கள் உள்ளிட்ட பல சொத்துக்கள் உள்ளன. இவருக்கு இலங்கையிலும் பல கல்வி நிறுவனங்கள் உள்ளன. இந்தக் கல்வி நிறுவனங்கள் நாடளாவிய ரீதியாக பல்வேறு பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. முஸ்தபா அப்துல் ரஹ்மான் போன்றோர் நல்லாட்சிக்கான முன்னணி என்ற ஒரு அமைப்பையும் நிறுவியுள்ளார்கள். இலங்கையில் இந்த முன்னணியை உடனடியாக தடை செய்ய வேண்டும் என்று நான் தேர்தல்கள் ஆணையாளரிடம் வலியுறுத்துகிறேன்.
2014ஆம் ஆண்டே நான் ஸஹ்ரான் தொடர்பில் நாட்டுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன். இவர் நாட்டை விட்டு தப்பித்துள்ளார் என்றும் கூறியிருந்தேன். இதற்கு சிப்லி பாரூக் மற்றும் இந்த அப்துல் ரஹ்மான் தான் உதவிகளை செய்துள்ளார்கள். இவர் தனியார் கல்வி நிறுவனத்தின் உரிமையாளர் என்ற தோற்றமே வெளியுலகுக்குத் தெரிகிறது.
ஆனால், இவரை அரசு கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். நாம் அனைத்து விடயங்களையும் கூறிவிட்டோம். தற்போது குருநாகல் மருத்துவரைக் கைது செய்துள்ளார்கள். ஆனால், இதன் பின்னணியில் ஒரு வலையமைப்பே இருக்கிறது. வேரை வெட்டாமல் கையை மட்டும் வெட்டி எந்தப் பயனுமில்லை. இதற்கான பணத்தை வழங்கும் மூலங்களை கட்டுப்படுத்த வேண்டும் -என்றார். (ஒ.5)

# கண்டியிலும் கிளம்புகிறது சிங்கள கருத்தடை சர்ச்சை

குருநாகல் போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவர் சிசேரியன் சத்திர சிகிச்சை என்ற போர்வையில் சிங்களப் பெண்களுக்கு நிரந்தர கருத்தடை செய்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்து அந்தப் பிரச்சினை கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க.
செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த எஸ்பி, பேராதனை மருத்துவமனையில் பணிபுரிந்து இப்போது மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற சிராஜ் என்ற மருத்துவரும் இன்னுமொரு பெண் மருத்துவரும் சுமார் 6 ஆயிரம் பெண்களுக்கு நிரந்தரக் கருத்தடை செய்துள்ளனர். பேராதனைப் பகுதியில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாட்டைச் செய்ய முன்வர வேண்டும், என்றும் கோரிக்கைவிடுத்துள்ளார். (ஒ.5)



# வான் படைக்கு புதிய தளபதி

வான் படையின் புதிய தளபதியாக எயார் மார்சல் சுமங்கல டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தை அவர் நேற்றுப் புதன்கிழமை பெற்றுக்கொண்டதாக அரச தலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி வான்படையில் கடெட் அதிகாரியாக சுமங்கல டயஸ் இணைந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
நேற்றுடன் ஓய்வுபெறும் கபில ஜயம்பதி எயார் சீப் மார்சலாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக இலங்கை வான்படை தெரிவித்துள்ளது. (ஒ.5)

# இலங்கை - ஜப்பான்- இந்தியா முத்தரப்பு உடன்படிக்கை

## கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை விருத்தி செய்ய

கொழும்பு, மே 30

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கை, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. கொழும்பில் நடந்த நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பல்கள் அமைச்சர் சாகல ரத்னாயக்க, இந்திய உயர் ஆணையர் தரன்ஜித் சிங் சந்து, ஜப்பான் நாட்டுத் தூதுவர் அகிரா சுகியமா ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குப்புறமாக ஆழ் கடல் கொள்கலன் முனையத்தை விருத்தி செய்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கம். இதற்காக கொள்கலன் நடவடிக்கை நிறவனம் ஒன்று தொடங்கப்படுகின்றது. அதில் 51விழுக்காட்டுப் பங்குகளை இலங்கையும் 49 விழுக்காட்டுப் பங்குகளை ஜப்பான் மற்றும் இந்தியாவும் கொண்டிருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் நிறுவனத்தின் விதிகள், நியதிகள் மற்றும் செயல் வடிவம் இனிமேல்தான் உருவாக்கப்பட உள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா 99 வருடங்களுக்குக் குத்தகைக்கு எடுத்துள்ள நிலையிலும் கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் செயற்கையான தீவை உருவாக்கி நிதி நகரம் ஒன்றை கட்டியெழுப்பி வரும் நிலையிலும் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விருத்தி செய்வதில் ஜப்பானும் இந்தியாவும் இணைந்துள்ளன. இது சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்குக்கான ஜப்பான், இந்தியாவின் பதில் நடவடிக்கை என்றே அரசியல் அவதானிகளால் பார்க்கப்படுகின்றது.

எனினும் கொழும்புத் துறைமுகம் கையாளும் 70 வீதமான கொள்கலன்கள் இந்தியாவுடன் தொடர்புபட்டன என்று துறைமுகங்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதே வேளை துறைமுகத்தின் கொள்கலன் முனையங்களை விருத்தி செய்வதில் 1980ஆம் ஆண்டு முதல் ஜப்பான் பங்காற்றி வருகின்றது என்றும் அது தெரிவித்துள்ளது. "இந்து மா சமுத்திரத்தின் கேந்திர நிலையம் என்ற வகையில், இலங்கையின் அபிவிருத்தியும் அதன் துறைமுகங்கள் எல்லோராலும் அணுகப்படக்கூடியதாக இருப்பதும் முக்கியமானது. இந்தத் திட்டம் மூன்று நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுகின்றது" என்று துறைமுகங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது. (உ)



துன்பத்தில் துவண்டுள்ள

## முஸ்லிம் சகோதரர்களுக்கு நாம் ஆறுதலாக இருப்போம்

*அருட்பணி சேவியர் குரூஸ் அடிகளார் தெரிவிப்பு*

மன்னார், மே 30

கடந்த உயிர்த்த ஞாயிறு விழாவின்போது இடம்பெற்ற குண்டு வெடிப்புக்குப் பின்பு முஸ்லிம் சகோதர்கள் துன்பத்திலும் பயத்திலும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களை நாம் சந்தித்து இவர்களுக்கு ஆறுதல் உள்ளவர்களாக எமது பங்களிப்பை வழங்க வேண்டும். இவ்வாறு மன்னார் மறைமாவட்ட முன்னாள் குரு முதல்வரும் தற்பொழுது மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத் தலைவருமான அருட்பணி ஏ.சேவியர் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.

மாவட்ட சமயங்களுக்கிடையிலான சமாதான புரிந்துணர்வை கட்டியெழுப்புதல் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் சர்வமத குழு மற்றும் மன்னார் பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் மன்னார் பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையும், மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது நாடு இக்கட்டான நிலமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. நாட்டில் ஒழுங்கையும் நீதியையும், அமைதியையும் நிலை நாட்ட அரசு பாடுபடுகின்றது.

இருந்தும் நாங்கள் அனைவரும் தொடர்ந்தும் பயத்துடன் நடமாடிக்கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய பங்கு என்ன? என்ற கேள்வி எழும்புகின்றது. இறைவனால் இயலாதது ஒன்றுமில்லை. இதைத்தான் எல்லா மதங்களும் போதிக்கின்றது.

எமது நம்பிக்கையும் அதுதான். சிறுதுளி பெரும் வெள்ளம் என்பது போல நமது பங்களிப்பு சிறிய அளவாக இருந்தாலும் இறைவன் அதைக்கொண்டு வேண்டியதைச் செய்வார்.

இந்நிலையில் எமது முஸ்லிம் சகோதரர்கள் மிகவும் துன்பத்துடனும்,பயத்துடனும் வாழ்கின்றனர். இவர்களைச் சந்தித்து எமது ஆறுதலை தெரிவித்து இதை எவ்வாறு எமது மாவட்ட சர்வமத பேரவையானது செயற்படுத்தலாமென கலந்துரையாடி இந் நாட்டினதும் ஒவ்வொரு உள்ளங்களிலும் அமைதியும் சமாதானமும் கிடைக்கப்பெற நாம் எமது பங்களிப்பை மனதார வழங்குவோம் - என்றார்.

இக் கலந்துரையாடலில் மதத் தலைவர்கள், மன்னார் மாவட்ட 5 காவல்துறை பிரிவுகளிலுள்ள உறுப்பினர்கள் , பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கொழும்பு தலைமையக தேசிய சமாதான பேரவையின் திட்ட இணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-60)

## மட்டக்களப்பில் கிளைமோர் மீட்பு

கொழும்பு, மே 30

மட்டக்களப்பு கண்ணகி அம்மன் வீதியிலுள்ள களப்புப் பகுதியிலிருந்து கிளைமோர் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை சுகாதார ஊழியர்கள் நேற்றுப் புதன்கிழமை காலை களப்பு பகுதியைச் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். களப்பில் கைவிடப்பட்ட நிலையில் கிளைமோர் குண்டைக் கண்டுள்ளனர். அதன் பின்னர் இந்த விடயம் தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற இராணுவத்தினரும் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் இணைந்து குண்டை மீட்டுள்ளனர்.

கிளைமோர் குண்டு விடுதலைப் புலிகளின் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம் என்று இராணுவத்தினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஒ,5)

## தே.அ.அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பவும்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளவேண்டியிருப்பின் அதிபர்கள் விரைவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு ஆள்ப்பதிவுத் திணைக்களம் பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்று வதற்கு ஆள் அடையாள அட்டை அவசியம். அதற்கான படிவங்கள் மற்றும் ஒளிப் படங்களை பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைக்க வேண்டும். இந்த ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சார்த்திகளுக்கு சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் அடையாள அட்டைகள் விநியோகிக்க வேண்டிய தேவை உள்ளது. ஆனால் இது வரை 2 லட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்களே கிடைத்துள்ளன. சில பாடசாலைகளிலிருந்து ஒருவிண்ணப்பம் கூட இது வரை கிடைக்கவில்லை. ஆகவே அதிபர்கள் விண்ணப்பங்களை விரைவாக அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-7)

## பொலிஸாரை தாக்கிய சட்டத்தரணி கைது

பெண் பொலிஸ் அலுவரை அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் பெண் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் புதுக்கடை உயர் நீதிமன்ற தொகுதியில் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஒ,5)

# கல்வியற் கல்லூரிகளுக்கு இம்முறை 8 ஆயிரம்பேர்

## ஜூன் முதல் வாரத்தில் நேர்முகப் பரீட்சை

கொழும்பு மே 30

2016 மற்றும் 2017 க.பொ.த (உ.தர) பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் தேசிய கல்வியற் கல்லூரிகளில் தேசிய கல்வி போதனா டிப்ளோமா பாடநெறியை பயில்வதற்கு இந்தமுறை 8 ஆயிரம் பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2012, 2013 ஆம் ஆண்டுகளில் கல்வியியற் கல்லூரிகளுக்குக் கல்வி போதனா பயிலுநர்களை இணைத்துக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதையடுத்து உருவான சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் கல்வி அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டுக்கு இரு குழுக்கள் என்ற அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.

27 பாடநெறிகளுக்காக 2016 ஆம் ஆண்டில் க.பொ.த (உ.தர) பெறுபேறுகளின் பிரகாரம் 4 ஆயிரம் பேரும், 2017 ஆம் ஆண்டு உயர்தர பெறுபேறுகளின் படி 4ஆயிரம் பேருமாக மொத்தம் 8ஆயிரம் பேர் நாடு முழுவதுமுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2019 ஜூன் மாதத்தின் முதல் வாரத்தில் நேர்முக பரீட்சைக்கு தோற்றுவதற்கான அழைப்பு கடிதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளது. மூன்றாம் வாரம் தொடக்கம் கல்வியியற் கல்லூரிகள் மட்டத்தில் நேர்முகப் பரீட்சைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

## நாலக சில்வா தொடர்பில் விசாரணை அவசியம்

ஐ.தே.க. வலியுறுத்து

கைதுசெய்யப்பட்டுபிணையில் விடுவிக்கப்பட்ட பயங்கரவாத புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய சம்பவத்தில் கைது செய்த அவரை பிணையில் விடுதலை செய்தமை கவலையளிக்கின்றது.

நாமல் குமாரவின் வாக்குமூலத்தை வைத்து நம்பகமான ஆதாரங்கள் இன்றி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நலக டி சில்வாவை கைது செய்தமை, அரசைக் கவிழ்ப்பதற்கான ஒரு சதியாக இருக்கலாம் - என்றார். (ஒ.5)



## கல்முனையில் ஆயுதங்கள் நேற்று மீட்பு

கல்முனையில் 'சொட்கண்' துப்பாக்கியும் அதற்கான ரவைகளும், ஏ.கே 47 ரக துப்பாக்கியின் ரவைகள் சிலவும், இரண்டு பெரிய வாள்களும் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை கிராமத்தின் எல்லையிலுள்ள நெல்வயலுக்கு அருகாமையில் புதருக்குள்ளிருந்து அவை மீட்கப்பட்டன.

அண்மைக்காலங்களாக இடம்பெறும் தொடர் சோதனைகளின் நிமித்தம் இவை மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று அவற்றை மீட்டனர். எவரும் கைது செய்யப்படவில்லை.

சந்தேகநபர்கள் தமிழ்ப் பகுதிகளில் குறித்த ஆயுதங்களை வைத்துவிட்டுச் செல்கின்றனரா என்று சந்தேகிக்கவேண்டியுள்ளது. படையினரின் பார்வையை திசைதிருப்பும் நோக்கமாகத்தான் இருக்குமென்றும் அங்குள்ள மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (த)

### இன்றைய பிரச்சினையில்

# தமிழரைக் கோர்த்துவிடும் சிங்கள அரசியல்வாதிகள்

## சாடுகிறது ஜனநாயக மக்கள் முன்னணி

*கொழும்பு, மே 30*

*ஆளும் தரப்பில் உள்ள அரசியல்வாதிகள் தற்போது இடம்பெறும் பிரச்சினைகளையும் தமிழர் பிரச்சினைகளையும் ஒன்றாகக் கோர்த்துவிட கங்கணம் கட்டி ஒருமித்து செயற்படுவது போல் தெரிகிறது. அதன் வெளிப்பாடாகவே அமைச்சர் ராஜித சேனாரட்ன 'முஸ்லிம் பிரபாகரனை உருவாக்க வேண்டாம்' என்று கூறியுள்ளார். சிங்கள அரசியல்வாதிகளின் இந்தச் செயற்பாடு கண்டனத்துக்குரியது. இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் அமைப்புச் செயலர் விநாயகமூர்த்தி ஜனகன் தெரிவித்துள்ளார்.*

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்கட்சிகள் அண்மையில் இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமான தாக்குதலும் அதன்பின்னணியில் இருப்போரையும் தமிழர் போராட்டத்தினுடனோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுடனோ ஒப்பிட முடியாது என்கிறார்கள்.

ஆனால் ஆளும் தரப்பில் உள்ள அரசியல்வாதிகள் அதற்கு நேர் எதிர்மாறாகச் செயற்படுகிறார்கள். முஸ்லிம் மக்களிடம் வாக்குகளை வாங்குவதற்காவும் தேவைக்கு உங்கள் வருவாய்ய பெருக்குவதற்காகவும் தமிழர்கள் பிரச்சனையை இங்கு கோர்க்க வேண்டாம். 1983 ஆண்டு அமிர்தலிங்கம் அவர்களும் தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கும் இன்று இந்தப் படுகொலை தீவிரவாதத்துக்கு துணை போகின்றவர்களை வெளியேற்ற கோருவதற்கும் ஏன் முடிச்சு போடுகிறீர்கள்? இங்கு உங்களுடைய உள் நோக்கம் என்ன?

தமிழ் மக்கள் அன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கப் பட்டார்கள் என்று இப்போதுதான் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் கண்களுக்குத் தெரிகின்றது. ஏன் அப்போது இந்த வார்த்தைகள் உங்களுக்கு வரவில்லையா? இப்பொழுது ஏன் இந்தப் பிரச்சனை யோடு தமிழ் மக்களை சந்தேகக் கண்கொண்டு பார்த்தது போல் முஸ்லிம் மக்களை பார்க்க வேண்டாம் என்று தமிழரை இதனுள் கோர்த்துவிடுகிறீர்கள்? இன்றுள்ள பிரச்சனையை மாத்திரம் பேசுங்கள். தயவுசெய்து ஏதோ நல்லது சொல்வது போல் இந்த குண்டுத் தாக்குதலிலும் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழரை மேலும் நோகடிக்காதீர்கள். இப்படி கூறிய உங்களுக்கு இந்த குண்டுத் தாக்குதலிலும் மீண்டும் மீண்டும் தமிழர் பாதிக்கப்படுகிறார்கள் அவர்களை பாதுகாப்போம் என்று ஏன் உங்களால் கூற முடிய வில்லை?

இன்று நாட்டில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கபட வேண்டும் என முஸ்லிம் தரப்பில் இருந்தே பலமான குரல்கள் வருகின்றன. ஆனால் இந்த வேளையில் உங்களுடைய இந்த செயற்பாடுகள் தீவிரவாதிகளுக்கும் அடிப்படைவாதிகளுக்கும் தான் தீனி போடுகின்றது. ஆனால் நிச்சயமாக சமாதானத்தை விரும்புகின்ற முஸ்லிம் மக்கள் உட்பட அனைத்து மக்களினதும் அபிமானத்தினை இப்படியான உங்கள் செயற்பாடுகளால் பெறமுடியாது.

தமிழர்களை மாற்றார் தாய் பிள்ளைகளாகவும் கறிவேப்பிலையாகவும் பார்ப்பதை நிறுத்துங்கள் - என்றுள்ளது.

(ஒ.5)

### வீட்டுப் பிரச்சினையை ராஜித பார்க்கட்டுமாம்

அமைச்சர் ராஜித சேனாரத்ன பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவர் தற்போதைய சூழலில் தனது வீட்டுப் பிரச்சினையைப் பார்க்கட்டும். நாட்டுப் பிரச்சினையில் தலையிட வேண்டிய தேவை இல்லை.

இவ்வாறு ஜன சத்த முன்னணியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ராஜித, தற்போதைய சூழ்நிலையில் வீட்டுப்பிரச்சினை பார்த்தால் போதும், நாட்டு பிரச்சினையில் தலையிட வேண்டிய அவசியமில்லை. அமைச்சர் ரிசாத் பதியுதீன் பணத்தால் தூண்டப்பட்டு பயங்கரவாதிகளுக்கு ஆதரவு வழங்கும் செயற்பாட்டில் ராஜித ஈடுபடுகின்றாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ.5)



## வித்தியாசமான சோதனை



கொழும்பு, மே 30

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக பாடசாலைகளுக்கு நுழையும் மாணவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். மாணவர்களது புத்தகப் பைகள் சோதனையிடப்பட்ட பின்னரே, வகுப்புகளுக்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் களுத்துறை மாவட்டத்தில் உள்ள தேவானந்தா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சோதனைகளை பாடசாலை நிர்வாகம் வித்தியாசமான முறையில் முன்னெடுத்துள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களை கவரும், உருவப் பொம்மைகளை அணிந்து கொண்டு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. மாணவர்களும் மகிழ்ச்சியுடன் பொம்மையுடன் விளையாடியவாறு சோதனை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இந்தச் செயற்பாடு சமூகவலைத் தளங்களில் பகிரப்பட்டுள்ளன. அவை பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

(ஒ.5,7)

## ஷரியா பல்கலைக்கழகத்தை உடன் அரசுடமையாக்குங்கள்

### நாடாளுமன்றில் தனிநபர் தீர்மானம்

கொழும்பு, மே 30

மட்டக்களப்பு ஷரியா பல்கலைக்கழகத்தை அரச பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக அறிவிக்குமாறு கோரி, தனிநபர் தீர்மானமொன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால இந்தத் தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

கடும்போக்குவாதமுடைய சிறு பிரிவிடமிருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்கு, மட்டக்களப்பு ஷரியா பல்கலைக்கழகத்தைப் பாதுகாப்பு அமைச்சுக்குச் சுவீகரித்து, அரச பாதுகாப்புப் பல்கலைக்கழகமாக அது அறிவிக்கப்பட வேண்டும் என்று திலங்க சுமதிபால தமது தீர்மானத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமையில் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு, இலங்கையில் இனியும் இவ்வாறான நிலை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று திலங்க சுமதிபால தெரிவித்தார்.

குறித்த பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை.

சட்டமுரணாக மேலதிகமாகச் சில பாடங்களைக் கொண்டியங்க முன்வந்துள்ளது. அதனை இயக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா சட்டவிரோதமாக நிதி பெற்று அதனைக் கட்டியுள்ளார் என்றும் நாடாளுமன்ற எதிர்க்கட்சி அணி குற்றஞ் சாட்டி வருகிறது. (கு)

## பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார் பிரபா கணேசன்!

### *மஸ்தான் எம்.பியின் இடைஞ்சல்களால் இந்த முடிவு என அறிக்கை*

கொழும்பு, மே 30

வன்னி மாவட்டத்தில் அரச தலைவரின் அபிவிருத்தி கருத்திட்டப் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக முன்னாள் பிரதி அமைச்சரும், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவருமான பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

'நான் கோரிய அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் எனக்கு நிதி ஒதுக்கவேண்டாம் என்று கோரியமையால் இவ்வாறு நிதி ஒதுக்கப்படவில்லை என்று சு.கவின் செயலர் தயாசிறி தெரிவித்தார். அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாமையால் பதவி விலகுகின்றேன்' என்று பிரபாகணேசன் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக அரச தலைவரின் வன்னி மாவட்ட கருத்திட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தேன். இது ஒரு அரசியல் நியமனம். இந்தப் பதவியின் ஊடாக பெரிய அளவில் மக்களுக்கான சேவையை ஆற்றக்கூடியதாக எவ்விதமான நிதி ஒதுக்கீடுகளும் சரியான முறையிலே வழங்கப்படவில்லை.

கடந்த ஆண்டு நான் கொடுத்த பல வேலைகளில் ஒரு சில வேலைகளே நடைமுறைப்படுத்தப்பட்டன. இது சம்பந்தமாக கடந்த ஆண்டு இறுதியில் இடம்பெற்ற பணிப்பாளர்கள் கூட்டத்தில் எனது அதிருப்தியை தெரிவித்த பொழுது 2019 ஆம் ஆண்டு பெரிய அளவில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும் என்ற உத்தரவாதம் மேலதிக செயலரின் ஊடாக எனக்கு வழங்கப்பட்டது.

இந்த வருட ஆரம்பத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் ஊடான கிராம தலைவர்களின் சந்திப்பை ஏற்படுத்தி அதன் ஊடாக பல கோடி ரூபாக்கான வேலைகளை பெற்றுக் கொண்டேன். வன்னி மாவட்டத்தில் நிலவிவரும் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் தாங்கிகள் அமைப்பதற்கான வேலைகளை உள்வாங்கினேன். இவற்றை அரச தலைவரின் செயலகத்துக்கு அனுப்பிய போது எவ்வாறான கவனமும் எடுக்கப்படாததை நான் அறிந்தேன்.

இது சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி தயாசேகரவிடம் முறையிட்டேன். எனது செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திர கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் முறைப்பாடு செய்ததாகவும் நான் எனது கட்சியான ஜனநாயக மக்கள் காங்கிரஸையே வன்னி மாவட்டத்தில் வளர்த்தெடுப்பதாகவும் அரச தலைவர் சம்பந்தமான எந்தவொரு விடயத்தையும் மக்களிடம் கொண்டு செல்வதில்லை எனவும் மஸ்தான் குற்றம் சுமத்தியதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். நான் வன்னி மாவட்ட மக்களின் தேவைக்கான கொடுத்த அனைத்து வேலைகளும் இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் என்னிடம் குறிப்பிட்டார் என்றுள்ளது.

(ஒ.5)



# முடங்கியது சூடான்

கார்த்தூம், மே 30

மக்களாட்சியைஏற்படுத்தவலியுறுத்திச்சூடானில்நடந்தநாடுதழுவியபொது வேலைநிறுத்தத்தில் மக்கள் ஈடுபட்டனர். அங்குள்ள வானூர்தி நிலைய ஊழியர்களும் இதில்பங்கேற்றனர். இதனால்வானூர்திச்சேவைகள்உட்படமுழுச் சூடானும் முடங்கியது.

48மணிநேரப்பொதுவேலைநிறுத்தப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்ட இதற்குஆதரவுதெரிவித்துஏராளமான அரச அலுவலகங்கள் மூடப்பட்டன. கடைகள்அடைக்கப்பட்டன.பெரும்பாலான இடங்களில்உள்ளூர்பேருந்துச் சேவைகளும் நடக்கவில்லை. துறைமுகங்கள், வங்கிகள், தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள் எது அனைத்தும் இயங்காததால் இந்தப் போராட்டத்தால் சூடான் நாடு முற்றிலுமாக முடங்கியது.

**பின்னணி**

சூடானில் அந்த நாட்டு அதிபருக்கு எதிரானபோராட்டம்கடந்தமாதம்உச்சமாகியநிலையில், இராணுவப்புரட்சியால் ஆட்சிகவிழ்க்கப்பட்டது.அதிபர்சிறையிலடைக்கப்பட்டார். புதிய அதிபராக அந்த நாட்டு இராணுவத் தளபதி பதவியேற்றார். மக்களின் எதிர்ப்புக் காரணமாக அவரும் பதவி துறந்தார். அதன்பின்னர் மக்கள் ஆட்சியை ஏற்படுத்த வலியுறுத்திச் சூடான் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

## ஆஸ்திரேலியாவின் தலைமை அமைச்சராக இரண்டாவது முறையும் ஸ்கொட் மோரிசன்

கான்பெரா, மே 30


ஆஸ்திரேலியாவின்தலைமைஅமைச்சராகவுள்ள ஸ்கொட் மோரிசன் இரண்டாவது முறையாகவும் ஆஸ்திரேலியாவின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவின் தலைநகர் கான்பெராவில் நேற்றைய தினம் நடந்த பதவியேற்பு விழாவில் ஸ்காட் மோரிசன் பதவி ஏற்றுக் கொண்டார். இவருடன்மைக்கல்மெக்கார்மாக்கும் துணைத் தலைமை அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவின் தலைமை அமைச்சராக, இருந்தமால்கம்டர்ன்புல்லுக்குஎதிராக மூத்த அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கியதால் நாடாளுமன்றத்தில் ஆட்சிப் பெரும்பான்மையைஅவரால்நிரூபிக்கமுடியாமல் போனது.

இதில் ஸ்கொட் மோரிசன் வெற்றி பெற்று முதல்தடவைதலைமைஅமைச்சரானார். தற்போது பொதுத்தேர்தலில்வெற்றிபெற்று இரண்டாவது முறையாகவும் அவர் தலைமை அமைச்சராகியுள்ளார்.








மகிழுந்து ஒன்றின் முன்பகுதிக்குள் (டாஷ் போர்ட்) தன்னைப் புகுத்திக்கொண்டு ஒளிந்தவாறு ஒருவரும், அதே மகிழுந்தின் இயந்திரப் பகுதியில் ஒளிந்தவாறு இன்னொருவருமாக ஸ்பெய்ன் ஊடாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்றுள்ளனர். நூதனமான முறையில் ஆபத்தான பகுதிகளில் கடினப்பட்டுப் புகுந்திருந்த குறித்த இருவரையும் பொலிஸ் அதிகாரிகள் கண்டறிந்து கைது செய்தனர்.






## இன்றைய நாள்

**மேடம்:** சுயலாபத்திற்காக சிலர் உங்களை புகழ்ந்து பேசுவர்; முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**இடபம்:** தள்ளிப்போய் கொண்டே இருந்த ஒரு காரியம் நிறைவேறி நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** இளமைக்கால இனிய நிகழ்வுகளில் மகிழ்வீர்கள். பணிசிறந்து தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். உபரி பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** செயல்களில் நிதானத்தை கடைப்பிடியுங்கள். தொழிலில் இடையூறுகளை உடனடியாக சரிசெய்வதன் மூலம் அளவான பணவரவு கிடைக்கும். உணவுப் பொருள் தரம் அறிந்து உண்ணவும்.

**சிம்மம்:** முக்கியமான காரியத்தை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். நற்பெயரை பாதுகாக்கவும். தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும்.

**கன்னி:** சூழ்நிலை உங்களுக்கேற்ப அனுகூலமாக அமையும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** இஷ்ட தெய்வத்தின் அனுக்கிரகத்தால் சிறு செயலையும் நேர்த்தியாக செய்வீர்கள். தொழில், வியாபாரத்தின் வளர்ச்சி மனநிறைவைத் தரும். தாராள பணவரவு கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்:** நற்பெயரை பாதுகாக்க நண்பரின் உதவியை நாடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். குடும்ப தேவைக்கான பணச்செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கதாமதமாகலாம். மனஉறுதியுடன் பணிபுரிய வேண்டும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். செலவு செய்ய வேண்டாம்.

**மகரம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றம் பெறும்.

**கும்பம்:** நண்பரின் மதிநுட்பம் நிறைந்த ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணிபுரிவீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணம் ஏற்படலாம்.

**மீனம்:** மனதில் உற்சாகமும், செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாய பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். சுமூக தீர்வு ஏற்படும்.

# உடற்கட்டமைப்புக்கு பயன்படுத்தும் மருந்துகளால் ஆண்மை பாதிப்பு

## விஞ்ஞானிகள் தகவல்

வேஷிங்டன்,மே 30

தங்களைக் கவர்ச்சிகரமானவராக காட்டிக்கொள்வதற்காகத் தங்களுடைய உடல் கட்டமைப்பில் அதிக அக்கறையெடுக்கின்ற ஆண்கள் அதற்காக உட்கொள்ளும் மாத்திரைகளால் மலட்டுத்தன்மையால் பாதிக்கப்படுகிறார்கள் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.




தங்களது ஆண்மையைப் பரிசோதிப்பதற்காக மருத்துவமனைக்கு வரும் ஆண்களில் பலர் உடற்கட்டில் ஆர்வமிக்கவர்களாக இருப்பவர்களாக இருக்கின்றனர் என்று கூறுகிறார் அமெரிக்காவின் பிரௌன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஜேம்ஸ் மோஸ்மான்.

உடற்கட்டைப் பெறுவதற்கு மருந்துகளை உட்கொண்டு ஹோர்மோன்களைத் தூண்ட செய்து தசைகளின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வதே இதற்கு முக்கிய காரணமென்று தெரிய வந்துள்ளது. பெண்களைக் கவருவதற்காக உடற்பயிற்சி கூடங்களுக்கு செல்லும் அநேக ஆண்களுக்கு ஆண்மை பாதிக்கப்படுவது முரண்பாடான ஒரு விடயமே என்கிறார் ஷெவ்பீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆலன் பேசி எனும் மற்றோர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு ஊக்க மருந்துகள் 'பிட்யூட்டரி' சுரப்பியை ஏமாற்றித் தசைகளால் உடல் வடிவை மாற்றுகின்றன.

இது விந்தணு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் எவ்ப்.எஸ்.எச் மற்றும் எல்.எச் ஆகிய இரண்டு ஹோர்மோன்களின் செயற்பாட்டை நிறுத்துகிறது.



தலையில் வழுக்கை ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஆண்கள் எடுத்துக்கொள்ளும் மாத்திரைகளாலும் இதையொத்த பிரச்சினையே ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகளின் பெயரை அடிப்படையாக கொண்டு, இதற்கு 'மோஸ்மான்பேசி பாரடாக்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

தம்பதிகளிடையேயான உடல் உறவில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் இது, கருத்தரிப்பதற்குத் தடையை ஏற்படுத்துவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



## போதைப்பக்கெற்றுக்களை விழுங்கிக் கடத்தியவர் பரிதாபகரச் சாவு





டோக்கியோ,மே 30

போதைப்பொருள்பாக்கெற்றுக்களைவிழுங்கிக் குடலுக்குள் மறைத்துக் கடத்தியவர், அவர் பயணித்த வானூர்தியில் பரிதாபமாகச் சாவடைந்தார்.

கொலம்பியாவின் தலைநகர்பொகோடாவில்இருந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமையன்று பயணித்த பயணிகள் வானூர்தியில் இந்தச் சம்பவம் நடந்தது. மெக்சிக்கோ நாட்டின் சொனேரா மாகாணத்தின் மீது பறந்து கொண்டிருந்த போது குறித்த வானூர்தியில் பயணம் செய்த ஜப்பானைச்சேர்ந்த42வயதுடைய ஒருவருக்குத்திடீரென வலிப்பு ஏற்பட்டது. உடனே வானூர்தி ஹெர்மோசில்லோ வானூர்தி நிலையத்தில் அவசரமாகத் தரை இறக்கப்பட்டது. அங்கு தயாராக இருந்த மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்தனர். அவர் ஏற்கனவே இறந்துவிட்டமை தெரிய வந்தது.

அவரதுஉடலைப்பரிசோதனைசெய்தபோது, அவரது வயிறு மற்றும் குடல் பகுதியில் 246 வரையான கோகைன் போதைப் பொருள் பாக்கெற்றுக்ககள் இருந்தமை தெரியவந்தது. ஜப்பானுக்குக் கடத்துவதற்காக அளவுக்கு அதிகமாகக் கோகைன் பாக்கெற்றுக்களை அவர் விழுங்கியிருக்கிறார். அவற்றில் சில பாக்கெற்றுக்கள் சிதைவடைந்து குருதியில் கலந்ததால் அவர் சாவடைந்திருப்பதாகப் பரிசோதனை முடிவில் கூறப்பட்டது.




## 'ஜோன்சன்' நிறுவனம் மீது மீண்டும் ஒருவழக்குப்பதிவு

வோஷிங்டன்,மே 30

'ஜோன்சன் அன்ட் ஜோன்சன்' நிறுவனத்துக்கு எதிராக அமெரிக்காவின் ஒக்லாஹோமா மாகாணத்தின் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மருந்துகளுக்குஅடிமையாகும்வண்ணம் வலி நிவாரணி மருந்துகளை தயாரிக்கின்றமை உட்பட அந்த நிறுவனத்துக்கு எதிராக அதிகளவானகுற்றச்சாட்டுகள்எழுப்பப்பட்டுள்ளன. ஆனால், 'ஜோன்சன் அன்ட் ஜோன்சன்' நிறுவனம் இந்தக்குற்றச்சாட்டுகளைமறுக்கிறது. குழந்தைகள் முகப்பூச்சு, சவர்க்காரம்உட்படப்பலபொருள்களை உற்பத்தி செய்கின்ற 'ஜோன்சன் அன்ட் ஜோன்சன்' நிறுவனம் தயாரிக்கும் குழந்தைகளுக்கான முகப் பவுடர்களில் புற்றுநோயை உண்டாக்கும் ஆஸ்பெஸ்டாஸ் துகள்கள் இருப்பது1971ஆண்டில்தெரியவந்ததாகவும், அதைப்பயன்படுத்தியதால் புற்றுநோய் உண்டானதாகவும் அந்த நிறுவனம் மீது ஆயிரக்கணக்கானவழக்குகள்உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரெக்ஸிட் விவகாரம்

## ஒப்பந்தம் இல்லாமல் வெளியேறுவது அரசியல் தற்கொலையாக அமையும்

*ஜெர்மி ஹண்ட் எச்சரிக்கை*

லண்டன்,மே 30

ஐரோப்பியஒன்றியத்தில்இருந்துவெளியேறுகிறபோது, ஒப்பந்தம் எதுவும் இல்லாமல் பிரிட்டன் வெளியேறுமேயானால், அது அரசியல்தற்கொலையாகஅமையும்என்று பிரித்தானியாவின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான ஜெர்மி ஹண்ட் எச்சரித்தார்.

ஒப்பந்தம்இல்லாமல்ஐரோப்பியஒன்றியத்திலிருந்துபிரிட்டன்வெளியேறுகின்றநடவடிக்கை பொதுத் தேர்தல் ஒன்றைக் கொண்டுவரும். இதனால் தொழிலாளர் கட்சி அதிகாரத்தைப் பெறலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேசா மே பதவி விலகுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து அவருடை இடத்தைப் பிடிக்கப் போட்டியிடும் 10 பேரில் ஒருவராகப் பிரிட்டனின்அயலுறவுத்துறைஅமைச்சராக இருக்கும்ஜெர்மிஹண்ட், குறிப்பிடப்படுகின்றமைசுட்டிக்காட்டத்தக்கது.





## வெனிசுலா அரசுக்கு எதிரான படை கொலம்பியாவில்உருவாக்கப்பட்டது

பேகோடா, கொலம்பியா. மே 30

கொலம்பியாவில் தஞ்சமடைந்துள்ள வெனிசுலாவின் முன்னாள் இராணுவ அதிகாரியானஎடியர்ரொட்ரிகஸின்தலைமையில் 'ஒபரேசன் வெனிசுலா' என்ற பெயரில்போராட்டக்குழுவொன்றுகொலம்பியாவில் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கொலம்பியாவின் புலனாய்வுப்பிரிவினர் குறிப்பிடுவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன. வெனிசுலாவில்வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த எடியர் ரொட்ரிகஸ் அங்கிருந்து தப்பியோடிக் கொலம்பியாவில்அகதியாகத்தஞ்சம்புகுந்துள்ள நிலையில், அவரைப்போலவே வெனிசுலாவின் இராணுவ, பொலிஸ் சேவைகளில்இருந்துதப்பிக்கொலம்பியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள இன்னும் சிலருமாக இணைந்து இந்த அமைப்பைஉருவாக்கியுள்ளதாகக்குறிப்பிடப்படுகிறது. இவர்கள்சட்டவிரோதமான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடாதவரையில் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்றும்கொலம்பியப்புலனாய்வுத்தரப்பினர்கூறுகின்றனர்.



கிளிநொச்சி, செல்வாநகர் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலில் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர். அது தொடர்பான மேலதிக ஒளிப்படங்கள் இவை. (ம)

## உடைத்து...

நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தப் பள்ளிவாசலை உடைத்து அகற்றியுள்ளோம்' என்று அந்தப் பகுதி முஸ்லிம் மக்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். (ம-22)

## சுகாதார...

கையில்லை என்று கூறியே மருத்துவமனையின் பணியாளர்கள் சாட்சியமளிக்க மறுத்து விட்டனர்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, விசாரிக்க ஒரு குழுவை நியமித்தால் அந்தக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க தயாரென்று வைத்தியசாலைப் பணியாளர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் சேகு சிஹாப்டீன் மொஹமட் சாபிக்கு எதிராக இதுவரையில் 238 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. குருநாகல் மருத்துவமனையில் நேற்று மட்டும் 82 முறைப்பாடுகளும், மொத்தமாக 202 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. தம்புள்ளயில் 34 முறைப்பாடுகளும், கலேவலையில் 2 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. (ம)

## நொச்சியாகம...

டைந்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து நேற்றையதினம் வானூர்தி நிலையத்துக்குச் சென்று மீண்டும் வவுனியா நோக்கி பயணிகள் வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது நொச்சியாகம பாலத்தில் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக வாகனத்தில் இருந்த வவுனியா தவசிகுளத்தைச் சேர்ந்த 23 வயதான விஜயகுமார் தனுசன் என்ற இளைஞன் உயிரிழந்தார். வாகனத்தில் பயணித்த மேலும் நால்வர் காயமடைந்துள்ள நிலையில் நொச்சியாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம)

## தேசிய...

வுக்குழு முன் முன்னிலையாகி அவர் சாட்சியம் வழங்கினார்.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, ஆசு மாரசிங்க, ஜயம்பதி விக்கிரமரத்ன, நலிந்த ஜெயதிஸ்ஸ ஆகியோர் கேள்விகளை எழுப்பினர்.

அங்கு செயலர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் இல்லாத பட்சத்தில் பாதுகாப்புச் சபையை தல்லமை அமைச்சர் கூட்டினால் அதில் அதிகாரிகள் கலந்து கொள்ள வேண்டும். 2014ஆம் ஆண்டிலிருந்து இந்த தாக்குதல்தாரிகள் குறித்து புலனாய்வு நடவடிக்கைகள் கிடைத்திருந்தன. முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வா இதுபற்றி அறிந்திருந்தாரோ எனக்கு தெரியாது. ஆனால் பாதுகாப்புத் தரப்பு இயன்றமட்டில் நடவடிக்கைகளை எடுத்திருந்தது. ஓரிரு புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்காக முழுப் புலனாய்வுத்துறையும் மங்கியது என்று கருத முடியாது. எமது புலனாய்வுத்துறை சிறப்பாகவே செயற்படுகிறது. அப்துல் ராசிக் என்பவரை கைது செய்யுமாறு பலர் கேட்டாலும் அவரை கைதுசெய்ய போதிய சாட்சிகள் இல்லையென்றே பொலிஸ்மா அதிபர் கூறுகிறார். போதிய சாட்சிகள் இருந்தாலே நாம் கைது செய்யலாம். சில இடங்களில் வன்முறைகள் நடந்தாலும் சமூக ஊடகங்களை இடைநிறுத்தி போலியான தகவல்களை நிறுத்தி நாம் இயல்பு நிலைமையை ஏற்படுத்தினோம். ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். இந்த தாக்குதல் சம்பங்கள் குறித்து முன்னர் பதவியில் இருந்த அதிகாரிகளும் இந்த தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். தேடுதல்களில் எவரையாவது கைது செய்ய வேண்டுமாயின் இராணுவம் பொறுப்பேற்று பொலிஸில் ஒப்படைக்க முடியும். கூடுதலாக நாம் பொலிஸுடன் இணைந்தே தேடுதல்களை செய்கிறோம். பள்ளிவாசல்கள் போன்ற இடங்களில் மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுவதில் சிக்கல் இருக்கிறது. இருந்தாலும் எல்லா இடங்களிலும் நாம் சொல்லிவிட்டு தேடுதல் நடத்த முடியாது. புலனாய்வுத் துறையினருக்கு முன்னரே தகவல்கள் கிடைத்தாலும் சில இடங்களில் உள்ள குறைபாடுகள் இருந்த காரணத்தினால் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் போனது. ஆனாலும் நாம் 99 வீதம் இப்போது உடனடி அச்சுறுத்தலை தடுத்து நிறுத்தியுள்ளோம். தேசிய தவ்ஹீத் ஜமாத் உறுப்பினர்களுக்கு பெரிய ஆயுதங்கள் இல்லை. ஆனால் வெடிமருந்து பொருள்கள் அவர்களுக்கு கிடைத்தன. அந்த வழிகளை தடுத்து நிறுத்தியுள்ளோம். ஆயுதப் பயிற்சியை விட மூளைச் சலவை செய்யப்பட்டவர்களை நாம் மறுவாழ்வு செய்யவேண்டும். நீண்ட தொலைநோக்குடன் செயற்படவேண்டும். அவர்களை கண்டறியவேண்டிய தேவை உள்ளது. அதை செய்கிறோம். இப்போது வன்முறைகளை செய்ய எடுக்கப்பட்ட பல முயற்சிகளை முறியடித்துள்ளோம். இன முறுகல் ஏற்படும் வகையில் செயற்படுவோர் கைதுசெய்யப்பட்டால் அவர்களுக்கு பிணை வழங்குவது மறுக்கப்படும் - என்றார். (ம)

## மேலதிகமாக...

மையில் வாடுகின்ற காரணத்தால் குறித்த திட்டத்துக்கு பல்லாயிரக் கணக்கானவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இதையடுத்து சமுர்த்தி மீளாய்வின்போது போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு கோரப்பட்ட விண்ணப்பங்களில் 90 வீதத்துக்கும் அதிகமானவை அனுமதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட சமுர்த்தி முத்திரை விநியோகங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 2ஆம் திகதி சமுர்த்தி அமைச்சரால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. அதேநேரம் வடக்கின் ஏனைய 3 மாவட்டங்களிலும் 9ஆம் திகதி குறித்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதேநேரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 53 குடும்பங்கள் வசிக்கும் நிலையில் இதுவரையில் 53 ஆயிரத்து 328 குடும்பங்களுக்கு மட்டும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற்றது. தற்போது மேலும் 23 ஆயிரத்து 11 குடும்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் தற்போது 11 ஆயிரத்து 753 பேருக்கு சமுர்த்தி நிவாரணம் கிடைக்கும் நிலையில் தற்போது 12 ஆயிரத்து 558 பேருக்கு புதிதாக அனுமதி கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 11 ஆயிரத்து 505 குடும்பங்களுக்கு சமுர்த்தி வழங்கப்படும் நிலையில் தற்போது மேலும் 13 ஆயிரத்து 87 குடும்பங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 10 குடும்பங்கள் சமுர்த்தியை பெறுகின்ற நிலையில் தற்போது 10 ஆயிரத்து 103 குடும்பங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரை காலமும் 11 ஆயிரத்து 19 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்தி வழங்கப்படும் நிலையில் தற்போது 13 ஆயிரத்து 300 குடும்பங்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளன. (ம-105)

## ஞானசாரரின்...

வாக்கப்பட்டுள்ளதுடன் அந்த நாட்டிலிருந்து 40 மில்லியன் ரூபா இலங்கைக்கு வந்துள்ளது என ஞானசார தேரர் தெரிவித்த கருத்தை துருக்கி தூதரகம் நிராகரித்தது.

தொலைக்காட்சி செவ்வியொன்றின்போது பொதுபலசேனாவின் ஞானசார தேரர் முன்வைத்த குற்றச்சாட்டுகளையே இலங்கைக்கான துருக்கி தூதரகம் நிராகரித்துள்ளது. ஞானசார தேரர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, பொய்யானவை என துருக்கி தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு முதல் இலங்கைக்குப் பல தருணங்களில் மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ள துருக்கி, இலங்கையுடன் நெருக்கமான நட்பைப் பேணி வந்துள்ளது. இலங்கையின் நீண்டகால நட்புநாடான துருக்கி இலங்கை மக்களுடன் எந்தவகை தீவிரவாதத்துக்கு எதிராகவும் தோளோடு தோள் நிற்கும் என துருக்கித் தூதரகம் மேலும் குறிப்பிட்டது. (ம)

## ரணில்...

என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பதை வெளியிட மறுப்புத் தெரிவித்துள்ளன.

மேற்படி சந்திப்பு தொடர்பில் நேற்றிரவு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் 'உதயன்' வினவியபோது, 'எனக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையில் நேற்று உத்தியோகபூர்வ சந்திப்பு இடம்பெறவில்லை' என்று மட்டும் பதிலளித்தார். தலைமை அமைச்சரின் அழைப்புக்கிணங்கவே சம்பந்தன் நேற்று அலரிமாளிகை சென்றார் என அறியமுடிந்தது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், அரசுக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருவேறு நிலைப்பாடுகளுடன் உறுப்பினர்கள் உள்ளனர். பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என ஒரு தரப்பினரும், பிரேரணையை எதிர்க்க வேண்டும் என மற்றொரு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே, தலைமை அமைச்சருக்கும் கூட்டமைப்பின் தலைவருக்கும் இடையில் நேற்று இரகசிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ம-22)

## கிளிநொச்சியில்...

ஒரு கர்ப்பிணிப் பெண் உட்பட 6 பெண்களும், 3 ஆண்களும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பட்டா ரக வாகனம் மற்றும் உந்துருளிகளில் முகமூடி அணிந்து வாள்களுடன் வந்த 15 இற்கும் மேற்பட்டவர்கள் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்களால் தற்காலிக வீடு ஒன்றும், உந்துருளி ஒன்றும் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. மற்றொரு உந்துருளி அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், இரண்டு வீடுகள் உள்ளிட்ட மேலும் பல உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இராணுவத்தினர் சம்பவ இடத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பங்களில் ஒரு குடும்பத்தினர், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தங்களுக்கு குறித்த சிலரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என முறைப்பாடு செய்திருந்தனர் எனவும், ஆனால், பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனவும் குறித்த குடும்பத்தின் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-22,222,6)

## ஜூன்...

அண்மைய தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட தனியார் பேருந்துப் போக்குவரத்து சேவைக்கான நிவாரணங்களை வழங்க அரசு உறுதிமொழி வழங்கினாலும் அவை நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தே இந்த வேலைநிறுத்தம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

## ஸஹ்ரானின்...

தலைவர் சிசிர மெண்டிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

அண்மைய தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் முன்னிலையான அவர் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது, நான் தேசிய புலனாய்வுத் தலைவர் பதவியில் இருந்தாலும் எனக்கு போதிய அதிகாரம் இல்லை. தாக்குதல் அச்சுறுத்தல்கள் குறித்து எனக்குக் கிடைத்த தகவல் ஒன்றை நான் பொலிஸ்மா அதிபருக்குத் தெரிவித்தேன்,

கடிதம் மூலம் அறிவித்தேன். ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்திலும் ஆராயப்படவில்லை. பெப்ரவரிக்கு பின்னர் பாதுகாப்பு சபை ஏப்ரல் வரை கூடவில்லை. இரண்டு மாதங்கள் தேசிய பாதுகாப்பு சபை கூடவில்லை. தகவல் பரிமாற்றம் பாதுகாப்பு தரப்பிடம் இருக்க வேண்டும். அது முக்கியமானது. வவுணதீவு பொலிஸார் கொல்லப்பட்டமை சக்ரான் குழுவினரால் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மாவனல்லை சம்பவம் குறித்தும் நாங்கள் விசாரணைகளை மேற்கொண்டோம். ஆனால் அந்த விசாரணைகளின் பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் பயிற்சிகளைப் பெற்று இலங்கை வந்தோரை விசாரணை செய்யவேண்டுமென நான் பல முறை வலியுறுத்தியிருந்தேன். வெளிநாட்டில் இருந்து மத போதகர்கள் வரும்போது அவர்களை எப்படி கையாள்வது என்பதை நாங்கள் ஆராய்ந்தோம். சக்ரான் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றை நான் ஏப்ரல் 4ஆம் திகதி முன்வைத்தேன். ஆனால் எனக்கு போதிய அதிகாரம் இல்லை - என்றார். (ம)

## கட்டைக்காடு சென்.மேரிஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், மே 30
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## முரசு மோட்டை விளைபூமிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மே 30
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இரண்டாவது ஆட்டத்தில முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக் கழகம் - தாளையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிகள் மோதின. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் முரசு மோட்டை விளைபூமி அணி வெற்றி பெற்றது. (23)

## பரந்தன் இளைஞர் வட்டம் அணி வெற்றி

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் பரந்தன் இள்ளஞர் வட்டம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வத்திரயான் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் பரந்தன் இளைஞர்வட்டம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. பரந்தன் இளைஞர்வட்டம் விளையாட்டுக்கழக அணி சார்பில் நிரூஷன் ஓர் கோலைப் பதிவு செய்தார். (23)





### உலகக் கிண்ண கால்பந்தாட்ட நட்பு ரீதியிலான ஆட்டத்தில்

# தமிழ் வீரர்கள் மூவர் பங்கேற்பு

2022 ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டி மற்றும் 2023 ஆம்ஆண்டு ஆசிய கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை 23 பேர் கொண்ட கால்பந்தாட்ட அணி தற்போது பயிற்சி ஆட்டங்களில் விளையாடி வருகின்றது. நேற்று முன்தினம் லாவோஸில் இடம்பெற்ற நட்பு ரீதியிலான ஆட்டத்தில் இலங்கை அணி லாவோஸ் கால்பந்தாட்ட அணியுடன் மோதியது. இதில் இலங்கை கால்பந்தாட்ட 11 பேர் கொண்ட அணியில் தமிழ் வீரர்கள் யூட்சுமன், டக்சன் பியுஸ்ஸஸ், நிதர்சன் ஆகியோர் உள்வாங்கப்பட்டனர். இதில் லாவோஸ் கால்பந்தாட்ட அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை கட்டார் நாட்டு இராணுவ கால்பந்தாட்ட அணியுடனான ஆட்டத்தில் இலங்கை கால்பந்தாட்ட 11 பேர் கொண்ட அணியில் யாழ்ப்பாண வீரர் யூட்சுமன் உள்வாங்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (23)

## குடத்தனை பொற்பதி சென்.பீற்றஸ் அசத்தல்

யாழ்ப்பாணம், மே 30
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் குடத்தனை பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில குடத்தனை பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குடத்தனை பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## தட்டெறிதலில் சுகனியா தங்கம்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் பாசையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.சுகனியா 21.12 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தைச் சுவீரித்தார். உரும்பிராய் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜெ.யஸ்மின் 18.87 மீற்ரர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும்; பாசையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த ஏ.ஆன்பியூலா 18.74 மீற்ரர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (422)





### யாழ். இந்து மகளிர் கல்லூரி

## வீராங்கனை டர்சி தங்கம் வென்றார்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் யாழ். இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த இ.டர்சி தங்கப் பதக்கத்தைச் சுவீரித்தார்.

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 பெண்களுக்கான தட்டெறிதலில் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இ. டர்சி 22.11 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியைச் சேர்ந்த ச.கஜானி 21.42 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக்கத்தையும், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கு. சகானா 20.59 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (422)

### இலங்கை போக்குவரத்து சபையின்

## வட பிராந்திய வி.க. அணி இறுதிக்கு முன்னேற்றம்

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வரும் வட மாகாண அரச திணைக்களங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இமையாணன் மத்தி மைதானத்தில் நடைபெற்றது. அரையிறுதியாட்டத்தில் வடமாகாண இலங்கைப் போக்குவரத்து சபை அணியை எதிர்த்து வடமாகாண ஆசிரியர் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுவரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். இருந்தும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடத்தில் இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் பெற முடியாமல் போக, வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் வட பிராந்திய இலங்கை பேர்க்குவரத்து சபை அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி தகுதி பெற்றது. (422-23)



# அத்தியார் இந்துவுக்கு தங்கப் பதக்கம்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ர.திவியா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ர. திவியா 18.09 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இ.கேதாரணி 17.37 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த எ.அபிரா 17.23 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (422)





# பாரதிபுரம் ஆதவன் வி.க. கிண்ணத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம், மே 30

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் புதிய பாரதி விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

புதிய பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.

இதில் முதலாவது செற் ஆட்டத்தை அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. தனது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாரதிபுரம்ஆதவன்விளையாட்டுக்கழக அணி அடுத்து மூன்று செற் ஆட்டத்தை 25:20,25:19, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்ட முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் பாரதிபுரம்ஆதவன்விளையாட்டுக்கழக





அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழக அணி வீரர் விதுசன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்டநாயகனாக பாரதிபுரம்ஆதவன்விளையாட்டுக்கழக அணி வீரர் லோகீதன் தெரிவானார். (23)

# உலகக் கிண்ணத் தொடர் இன்று கோலாகல ஆரம்பம்

உலகக் கிண்ணத் தொடரில் இன்று ஆரம்பமாகும் போட்டியில் இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் சமபலம் பொருந்தியவை என்பதால் உலகக் கிண்ணத்தின் தொடக்க ஆட்டமே மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்து அணி தரவரிசையில் முதலிடத்திலும், தென்னாபிரிக்கா அணி 3ஆவது இடத்திலும் உள்ளன.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 1975ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கிலாந்தில் நடைபெற்ற முதல் உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி கிண்ணம் வென்றது. அதைத்தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்று வருகின்றது. இறுதியாக 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் ஆஸ்திரேலியா அணி கிண்ணத்தை வென்றது.

இதுவரை 11 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் ஆஸ்திரேலிய அணி 5 முறையும், மேற்கிந்தியத்தீவுகள் அணி, இந்திய அணி தலா 2 தடவையும், பாகிஸ்தான், இலங்கை அணிகள் தலா ஒரு தடவையும் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன.

12ஆவது உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் இடம்பெறுகின்றது. இந்தத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இதில் 10 நாடுகள் பங்கேற்கின்றன.

போட்டி அமைப்பில் இந்த முறை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 1992ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் பின்பற்றப்பட்ட முறை தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளுடன் ஒவ்வொரு முறை மோத வேண்டும். அதாவது ஒவ்வொரு அணிக்கும் 9 ஆட்டம் இருக்கும். 'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

கிரிக்கெட்டை உலகுக்கு அறிமுகப்படுத்திய இங்கிலாந்து அணி இதுவரை உலகக் கிண்ணத்தை வென்றது இல்லை. தற்போது 20 ஆண்டுகளுக்கு பிறகு போட்டியை நடத்துவதால் முதல் முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது. இதேபோல தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளும் முதல் முறையாக சம்பியன் பட்டத்தை வெல்வதற்கு காத்திருக்கின்றன.

போட்டி அமைப்பு முறை சுவாரஸ்யம் அளிக்கும் வகையில் இருப்பதால் முன்னணி அணிகள் அரையிறுதியில் நுழைவதில் சவால் இருக்கலாம். பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகள் முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி கொடுக்க வாய்ப்புக்கள் உள்ளது.

ஒவ்வொரு அணியும் உலகக் கிண்ணத்தை வெல்ல கடுமையாகப் போராடும். இதனால் ரசிகர்களுக்கு இந்த உலகக் கிண்ணத் திருவிழா விருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.




# இன்றை போட்டியில் ஸ்ரெய்ன் இல்லை

12ஆவது உலகக் கிண்ணப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. இதில் இன்று ஆரம்பமாகும் முதல் போட்டியில் இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன. தென்னாபிரிக்கா அணியின் பந்து



வீச்சாளர் ஸ்ரெயினுக்கு பயிற்சியின் போது வலது பக்க தோளில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இன்றைய முதலாவது ஆட்டத்தில் பங்கேற்கமாட்டார் என தென்னாபிரிக்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது. இரு அணிகளும் சமபலத்துடன் இருந்த போதும் ஸ்ரெய்ன் இல்லாதது தென்னாபிரிக்கா அணிக்கு பெரும் இழப்பே.

# யாழ். போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி இறுதிக்கு

யாழ்ப்பாணம், மே 30

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அரச திணைக்களங்களுக்கு இடையில் இடம்பெற்ற கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இமையாணனன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணியை எதிர்த்து வடமராட்சி ஆசிரியர் கால்பந்தாட்ட அணி மோதியது. இதில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில்- இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கால்பந்தாட்ட அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (23)







# ஒசாகா, ஹாலப் முன்னேற்றம்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரென்ஞ் பகிரங்க ரென்னிஸ் போட்டி பாரிஸில் இடம் பெற்று வருகின்றது. 3ஆவது நாள் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில், யப்பான் நாட்டை சேர்ந்த முதல் நிலை வீராங்கனை நவோமி ஒசாகா - சுலோவாக்கியா வீராங்கனை அன்ன கரோலினா சிமிட்லோவாவை எதிர்கொண்டார். இதில் ஒசாகா 6:0, 7:6, 6:1 என்ற நேர் செற் கணக்கில் சிமிட்லோவாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். ஒசாகா அடுத்த சுற்றில் அசரென்காவை எதிர்கொள்ளவுள்ளார்.

மற்றொரு போட்டியில் ருமேனியா நாட்டை சேர்ந்த நடப்பு சம்பியனான சிமோனா ஹாலெப்-ஆஸ்திரேலியா நாட்டின் டோம்ஜனோவிச்சை எதிர்கொண்டார். இதில் ஹாலெப், 6:2, 3:6, 6:1 என்ற செட் கணக்கில் டோம்ஜனோவிச்சை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு நுழைந்தார். இவர் அடுத்த சுற்றில் போலந்து வீராங்கனை மண்டா லைன்ரியை எதிர்கொள்ளவுள்ளார்.

# 2020 ரி-20 ஆசியக் கிண்ண உரிமம் பாகிஸ்தானிடம்

2020ஆம் ஆண்டுக்கான ரி-20 ஆசிய கிண்ணத் தொடரை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது.

கிரிக்கெட் விளையாடும் ஆசிய நாடுகளுக்கு இடையில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு 50 பந்துப்பரிமாற்றங்களாக நடத்தப்பட்ட ஆசியக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்றது. பாகிஸ்தான் - இந்தியா இடையில் அரசியல் தொடர்பான பிரச்சினை இருந்து வருவதால் போட்டி இந்தியாவில் நடத்தப்படாமல், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்று ஆசியக் கிரிக்கெட் சபைக் கூட்டம் சிங்கப்பூரில் நடைபெற்றது. இதில் போட்டியை நடத்தும் உரிமையை பாகிஸ்தானிடம் வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் போட்டிகள் பொதுவான இடத்தில் இடம்பெறும். அடுத்த வருடம் ரி-20 உலகக்கிண்ணப் போட்டி ஆஸ்திரேலியாவில் நடக்கிறது. இதற்கு முன்னோட்டமாக இந்தத் தொடர் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

# 2019 உலகக் கிண்ணத்தில் 500 ஓட்டங்களை எட்டுவோம்

## மேற்கிந்தியத்தீவுகள் வீரர் ஹோப் நம்பிக்கை



ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து பெரிய இலக்குகளை விரட்டியும், பெரிய இலக்குகளை நிர்ணயித்தும் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏனைய அணிகளை அச்சுறுத்தி வருகிறது. அந்த அணியிடம் தடையற்ற ஒரு மனப்போக்கு உள்ளதே இதற்குக் காரணம்.

பந்து வீச்சு, துடுப்பாட்டம், என கூறிக் கொண்டிருக்கும் அணிகளுக்கு இத்தகைய தடையற்ற மனப்போக்கு இல்லை.

மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் இடம்பெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான பயிற்சி போட்டியில் 421 ஓட்டங்களை குவித்து வெற்றி பெற்றது. இதனையடுத்து இந்த உலகக் கிண்ணத்தில் நிச்சயம் 500 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை ஏதாவது ஒரு அணி எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் ஹோப் தெரிவித்ததாவது;

நிச்சயமாக 500 ஓட்டங்கள் என்ற இலக்கை ஏதாவது ஒரு தருணத்தில் பதிவு செய்வோம். 500 ஓட்டங்கள் மைல்கல்லை எட்டும் முதல் அணி என்பது நிச்சயமாக பெரிய விடயமே.

எங்களிடம் நிச்சயமாக அந்த மைல்கல்லை எட்டும் துடுப்பாட்டத் திறன் உள்ளது.

ரஸல் நிச்சயம் வேறு ஒருவருடன் ஒப்பிட முடியாத வீரர். அவரைப்பற்றி எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவருடன் இணைந்து ஆடுவது மகிழ்ச்சி தரும் அனுபவமாகும். களத்தில் அவருக்கு எப்படி பந்து வீசுவது என்று எதிரணிகள் திணறும் போது எங்களுக்கு உள்ளூர மகிழ்ச்சியாகவே இருக்கும் - என்றார்.



இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் பொண்டிங்கிடம் ரசிகர்கள் முண்டியடித்துக் கொண்டு கையொப்பம் பெற்றுச் சென்றனர். இந்த ஒளிப்படத்தை பகிர்ந்துள்ள பன்னாட்டுக் கிரிக்கெட் சபை, 'ரசிகர்களின் மனம் கவர்ந்த நபராக பொண்டிங் தற்போதும் உள்ளார்' என்று குறிப்பிட்டுள்ளது. (ம)

வேலைக்கு ஆள்கள் தேவை
பக்கிங் (Packing) வேலை செய்வதற்கும் கடையில் நிற்பதற்கும் பெண் பிள்ளைகள் தேவை.
021 221 1179
(CS 25687) (14,17)

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 448 சீட்டிழுப்பு திகதி: 2019.05.28
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
I 44 45 71 74
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 125,796,453/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
2019.05.31ம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 29.05.2019 வெற்றி வாரம் 2527 வர்ணம் பச்சை
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 30 38 41 48
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,589,624 /=
30.05.2019ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 248
சீட்டிழுப்பு திகதி 29.05.2019 நீலம்
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 16 38 45
விதி எண் 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 1,74,33,780/=
01.06.2019ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
ஊதா
வெற்றி வாரம்: 3189 திகதி: 29.05.2019
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 17 23 32 67 W
போனஸ் இலக்கம் 31
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 44,750,320/-

| ரூ.200,000 பெறுமதியான ஆபரண தொகுதிகள் வென்ற வெற்றி இலக்கங்கள் | |
|---|---|
| 8009803 | ஹம்பந்தோட்டை |
| 7815575 | பதுளை |
| 4666324 | கேகாலை |
| 3041820 | காலி |
| 8255284 | கொழும்பு |
| 2251083 | குருணாகலை |
| 7015189 | அம்பாறை |
| 8621085 | கம்பஹா |
| 6907599 | மொணராகலை |
| 8803329 | இரத்தினபுரி |

| ரூ.100,000 பணப்பரிசு வென்ற வெற்றி இலக்கங்கள் | |
|---|---|
| 4278829 | குருணாகலை |
| 3177210 | களுத்துறை |
| 2702148 | கண்டி |
| 1348177 | புத்தளம் |
| 6726354 | கொழும்பு |
| 8148419 | காலி |
| 7012593 | ஹம்பந்தோட்டை |
| 4833099 | கண்டி |
| 5912620 | கேகாலை |
| 3668643 | கம்பஹா |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2019.06.01 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 623
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.05.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,308,065/-
வெற்றி இலக்கங்கள் 20 36 46 69
ஆங்கில எழுத்து R
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.